DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

உதயம் 1449 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 12, 2024

# "கனடாவில் தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதில் தமிழ் ஊடகங்களின் பங்களிப்பைக் கண்டு வியக்கின்றேன்"

## "அனலை எக்ஸ்பிரஸ்" ஊடகக் குழுமத்தின் "பாரம்பரியம்" விழாவில் கலந்துகொண்ட ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் புகழாரம்




"நான் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் தமிழ் பேசும் மாணவ மாணவிகளை சந்தித்து உரையாடியிருக்கின்றேன்.
அத்துடன் இங்குள்ள தமிழ் மொழி சார்ந்த பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் நெருக்கமாகப் பழகி வருகின்றேன்.
இவ்வாறான நிலையில். கனடாவில் தமிழ் மொழியையும் தமிழர் கலைகளையும் வளர்ப்பதில் தமிழ் ஊடக நிறுவனங்களின் பங்களிப்பைக் கண்டு வியக்கின்றேன்".
இவ்வாறு கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்ற "அனலை எக்ஸ்பிரஸ்" ஊடகக் குழுமம் கனடாவில் நடத்திய "பாரம்பரியம்" முழு நீள முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் **Hon. Stephen Lecce** புகழாரம் சூட்டினார்.

(உள்ளே விபரமான செய்தி 19ம் பக்கத்தில்)

# "தமிழ்நாடு அரசையே ஏமாற்றத் துணிந்திருக்கும் "போலி"யான பண்பாட்டு இயக்கத்தின் பிரதிநிதிகள்"

## கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட "உண்மையான" உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் விடுத்துள்ள செய்தி.



யாழ்ப்பாணத்தில் 1974ம் ஆண்டு இடம்பெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் அன்று இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக பொலிசாரின் தாக்குதலினாலும் சன நெரிசலிலும் கொல்லப்பட்டவர்களது 50வது ஆண்டு நினைவஞ்சலியில் கலந்து கொள்வதற்கான நான் யாழ்ப்பாணம் வந்துள்ளேன். இவ்வேளையில் எமது உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகத்தைக் கொண்டு கனடா தேசத்திலிருந்து எமது இயக்கத்தின் முக்கிய உறுப்பினர் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர். எமது இயக்கத்தின் இலங்கைக் கிளை உறுப்பினர்களோடு இணைந்து அமெரிக்காவின் கலிபோர்னியா நகரத்தின் இவ்வாண்டு நடைபெறவுள்ள உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பொன்விழாவை சிறப்பாகக் கொண்டாடுவகையில் எமது கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

(உள்ளே விபரமான செய்தி 19ம் பக்கத்தில்)

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ALL IN 1
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

எங்கள் வாசக அன்பர்கள், விளம்பரதாரர்கள், மற்றும் அனைவருக்கும் எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டபூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road, Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE


தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்
நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடனும்,
அமைதி மற்றும் செழிப்புடனும் வாழ வாழ்த்துகின்றேன்.
இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!
May the blessings of Thai Pongal
Leave you in good health,
Peace and prosperity.
Happy Thai Pongal!
Member of Parliament | Scarborough North
SHAUN CHEN
4386 Sheppard Avenue East, Unit E
Scarborough, Ontario M1S 1T8
416-321-CHEN (2436)
info@shaunchen.com
ShaunChenMP
@shaunchenmp
@Shaun_Chen
www.shaunchen.com


Toronto District School Board
நடுத்தர பிரஞ்சு பாடத் திட்டம்
(4ம் வகுப்பு நுழைவு)
விண்ணப்பங்கள் தொடங்கும் திகதி: ஜனவரி 8, 2024
விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி: பிப்ரவரி 2, 2024
தற்போது பிரெஞ்சு பாடத் திட்டத்தில் இல்லாத தரம்
3 மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்
மேலும் தகவல்களுக்கும் மற்றும் இணையத்தளம் மூலமாக
விண்ணப்பிக்க, தயவுசெய்து
www.tdsb.on.ca/french இணைப்பை பார்வையிடவும்


Tamil Heritage Month
இனிய தமிழ் மரபுத்திங்கள்
MPP Logan Kanapathi
Markham - Thornhill
மாகாணம் சார்ந்த விடையங்களுக்கு
நீங்கள் என்னை தொடர்பு கொள்ளலாம்.
Tel: 905 - 305 - 1935 | E-mail: logan,kanapathico@pc.ola.org
Visit Us: 7380 McCowan Rd, Unit 3, Markham
https://logankanapathi.ca/

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# உலகத் தமிழர் பேரவையின் கூட்டமைப்பிலிருந்து விலகி நில்லுங்கள்

## கனடிய தமிழர் பேரவைக்கு கனடா உதயன் ஆசிரிய பீடம் எழுதும் பகிரங்க மடல்

எமது கடந்த வார ஆசிரியர் தலையங்கமான 'கதிரோட்டம்' பக்கத்தில் நாம் வெளிப்படையாகவே குறிப்பிட்டிருந்தோம், "இமாலயப் பிரகடனம் என்பது இலங்கைத் தமிழர் வரலாற்றில் இழைக்கப்பெற்ற மற்றுமொரு மன்னிக்க முடியாத துரோகம்' இதேவேளை கனடாவிலிருந்து கடந்த 27 வருடங்களாக வாரம் தவறாமல் வெளிவரும் முதன்மைத் தமிழ் பத்திரிகைக்கும் அதன் ஆசிரிய பீடத்திற்கும் இந்த விடயத்தில் உள்ள பொறுப்பு மற்றும் கனடா வாழ் தமிழர்களில் சிலரிடமிருந்து பெற்றுக் கொண்ட கருத்துக்கள் தொடர்பாகவும் எமது முக்கிய குரலாக நாம் கணித்து வரும் 'கதிரோட்டம்' பக்கத்தை கனடிய தமிழ்ர் பேரவைக்கு நாம் எழுதும் பகிரங்க மடலாக சமர்ப்பிக்க விரும்புகின்றோம்.

நாம் இந்த மடலில் 'இமாலயப் பிரகடனம்' தொடர்பாக விரிவாக எழுதுவதற்கு தற்போது முயலவில்லை. கனடியத் தமிழர் பேரவை கனடாவில் நிறுவப்பட்ட அந்த நாள் தொடக்கும் அதன் பயணத்தில் பக்க பலமாகவும் அவர்களின் செயற்பாடுகளை மக்களுக்கு எடுத்துச் செல்லும் ஒரு 'செய்திப் பலகையாகவும்' விளங்கியதால், அந்தப் பொறுப்பிலிருந்து இம்மடலை வரைகின்றோம்.

கனடியத் தமிழர் பேரவை என்னும் பலமான ஒரு அமைப்பை நிறுவவேண்டிய ஒரு தேவை என்கின்ற எண்ணம். விடுதலைப் புலிகள் அமைப்பு பலத்துடன் விளங்கிய காலத்தில் தோன்றியதும். இது பற்றி அந்த நாட்களில் பலரும் அறியக்கூடிய வகையில் இருந்தது. ஆரம்பத்தில் கனடிய தமிழர் பேரவையாது கனடியத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை கணித்து அவைக்கேற்ப இயங்கும் ஒரு மக்கள் அமைப்பாக இருந்தது. பின்னர் கனடியத் தமிழர்களின் சமூகம் சார்ந்த செயற்பாடுகளுக்கும் ஆர்வத்திற்கும் ஏற்றாற்போல் அதன் செயற்பாடுகள் அமைந்தன.

ஆனால் இன்று உலகத் தமிழர் பேரவையினரால் ஏற்படுத்தப்பெற்ற 'கூட்டமைப்பு' தோற்றம் பெற்றதன் பின்னர் எமது கனடியத் தமிழர் பேரவையின் இலங்கை அரசியல் தொடர்பான செயற்பாடுகளில் பெரும்பாலான கனடியத் தமிழர்களுக்கு கருத்து வேறுபாடுகள் தோற்றம் பெற்றன. உலகத் தமிழர் பேரவையைப் பொறுத்தளவில் அந்த அமைப்பு கடந்த பல ஆண்டுகளாக ஒரு "மூடிய புத்தகமாகவே' மக்களுக்குத் தோன்றியது. ஆதன் செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்கள். மேற்கொள்ளும் தொடர்புகள் போன்றவை அனைத்து நாடுகளிலும்' வாழும் தமிழ் அரசியல் அவதானிப்பு கொண்டவர்களால் விமர்சிக்கப்பட்டு வந்தன புடிப்படியாக மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்காமல் அல்லது அவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள முயலாமல். உலகத் தமிழர் பேரவையும் சிறந்த இலங்கைக்கான பௌத்த சங்கமும் ஒன்றாக வெளியிட்ட இமாலயப் பிரகடனமானது வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு சில விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளது. கடந்த 75 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்களை ஏமாற்றிய வண்ணம் தங்கள் பாராளுமன்றக் கதிரைகளை அலங்கரித்து அதனால் இலாமடைந்த தென்னிலங்கை அரசியல்வாதிகளும் 'தமிழர் தலைமைகள்' என்று தங்களை அழைத்து கொண்டவர்களும் காலத்திற்கு காலம் தீர்வு காணும் விடயங்களில் தங்களுக்கு அக்கறையுள்ளது போல காட்டி. அதன் மூலம் காலத்தை நீட்டியும் வீணாக்கியும் தொடர்ந்த வண்ணம். அந்த காலப்பகுதியில் தங்கள் நலன்களைப் பேணும் முயற்சிகளில் கவனத்தை செலுத்தும் வகையில் காய்களை நகர்த்திக் கொண்டே இருந்தார்.

இந்த 'இமாலயப் பிரகடனம்' தொடர்பாக கனடிய தமிழர் பேரவையின் முக்கிய உறுப்பினர்களின் கருத்துப்படி. இந்த வழியில் தீர்வையோ அன்றி ஒரு முடிவையோ அடைவதற்கு மிக நீண்ட காலம் எடுக்கும் என்று கூறப்பட்டது. இந்த பிரகடனம் சார்ந்த தமிழர் தரப்பின் தலைமைத்துவத்தை எடுத்துக்கொண்டதாகக் கூறப்படும் உலகத் தமிழர் பேரவை மீதும் நம்பகத் தன்மை குறைந்த அளவிலேயே உள்ளது. இதே நேரம். 'இமாலயப் பிரகடனம்' தொடர்பாக உலகெங்கிலுமிருந்து அதிகளவில் எதிர்ப்புக்களும் விமர்சனங்களும் தோன்றியவண்ணம் உள்ளன.

எனவே கனடிய தமிழர் பேரவையானது உடனடியாக ஒரு முடிவை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்றே நாம் கருதுகின்றோம். இந்த கனடிய தமிழ் அமைப்பிற்கு கனடியத் தமிழர்கள் சார்ந்த பல பணிகள் உள்ளன.

கனடாவில் அவ்வப்போது நடைபெறும் மத்திய மாநில உள்ளாட்சித் தேர்தல்களில் கனடிய தமிழர் பேரவையின் பங்களிப்பு கடந்த காலங்களில் கணிசமான அளவில் காணப்பட்டது. இவ்வாறன செயற்பாடுகளில் இந்த அமைப்பு தொடர்ந்து கவனம் செலுத்தலாம்.

எனவே கனடிய தமிழர் பேரவையானது உடனடியாக உலகத் தமிழர் பேரவை ஏற்படுத்திய கூட்டமைப்பிலிருந்து விலகி நிற்க வேண்டும் என்றும் இனிவரும் நாட்களில் மேலதிகமான கருத்துக்களை நாம் பகிர்ந்து கொள்ள தயாராக உள்ளோம் என்பதையும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

ஆசிரிய பீடம் -கனடா உதயன் - 12-01-2024

# தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியா முல்லைத்தீவு பகுதிகளுக்கு பல இலட்சம் உதவி!




யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட, தெரிவு செய்யப்பட்ட 123 குடும்பங்கங்களுக்கான ரூபா 615,000 பெறுமதியான உலர் உணவு பொதிகள் நேற்று முன்தினம் 10-01-2024. அன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதில் முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட மாமூலை - கிராமசேவையாளர் பிரிவில் 52 குடும்பங்களுக்கும், வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட கோவில்புளியங்குளம் கிராமசேவையாளர் பிரிவில் 35 குடும்பங்களுக்கும், கணேசபுரம் கிராமசேவையாளர் பிரிவில் 36 குடும்பங்களுக்குமே உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த உலர் உணவு நிவாரணத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், தொண்டர்கள், சமூக செயற்பாட்டாளர் இ. தயாபரன், கோவில் புளியங்குளம் கிராமசேவகர் சர்வேந்திரன், முன்னாள் வெங்கல செட்டிக்குளம்

பிரதேச சபை தவிசாளர் வெங்களசெட்டிகுளம் சு.ஜெகதீஸ்வரன், வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர் ம.சுஜேந்திரன் ஆகியோர் சென்று வழங்கிவைத்தனர்.

# யாழ்ப்பாணத்தில் மலக்கழிவகற்றும் பவுசர்களை ஜீ.பி.எஸ். தொழினுட்பத்தினூடாக கண்காணிக்க வடக்கு ஆளுநர் அறிவுறுத்தல்



யாழ்ப்பாணத்தில் மலக்கழிவுகள் உரியவாறு அப்புறப்படுத்தாமையால் பல்வேறு சிக்கல்களை எதிர்க்கொள்ள நேரிட்டுள்ளதாக வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களிடம், ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் முறைப்பாடு முன்வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவங்களின் ஊடாக மலக்கழிவகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும், பவுசர்களில் நிரப்பிச் செல்லப்படும் மலக்கழிவை உரியவாறு அப்புறப்படுத்துவதில்லை எனவும் கௌரவ ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்டது. ஒரு சில பகுதிகளில் பொதுமக்கள் குடியிருப்புகளுக்கு அண்மையில் இவை கொட்டப்படுவதால் சுகாதார சீர்கேடுகளும் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இந்த விடயங்களை கேட்டறிந்துக் கொண்ட

கௌரவ ஆளுநர் பின்வரும் நடவடிக்கைகளை அமுல்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

1.மலக்கழிவகற்றும் பவுசர்களை ஜீ.பி.எஸ். தொழினுட்பத்தினூடாக கண்காணித்தல்.
2.மலக்கழிவகற்றும் செயற்பாடுகளில் ஈடுபடும் அனைத்து நிறுவனங்களும் மாகாண சுகாதார அமைச்சில் பதிவு செய்யப்பட வேண்டும்.
3.இந்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும் பவுசர்களில், நிறுவனத்தின் பெயர், பதிவு விபரங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
4.இவர்களுக்கான ஒழுங்கு விதிகளை உள்ளூராட்சி நிறுவனங்கள் அறிவிக்க வேண்டும்.
5குறித்த பவுசர்களை போக்குவரத்து பொலிசாரின் ஒத்துழைப்புடன் கண்காணிக்க வேண்டும்.

இந்த கூட்டத்தில் உள்ளூராட்சிமன்ற திணைக்கள ஆணையாளர், யாழ்.மாநகர சபை ஆணையாளர், ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டனர்.

Commercial Cleaner Wanted
Hiring Commercial Cleaner
Area: Barrie Ont.
Full time 7am to 3pm
Monday to Friday
Industrial / office area cleaner
Call: 647-640-4050

For All your Renovation Needs!
- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno
Call - Siva
416-706-8160

# கிளிநொச்சி மணியங்குளம் பகுதியில் ஐம்பது குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



கிளிநொச்சி மணியன்குளம் பகுதியில் வசிக்கும் ஐம்பது தெரிவிசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி உதவும்படி, மணியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள், பூமணி அம்மா அறக்கட்டளையினரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பூமணி அம்மா அறக்கட்டளையின் வாழ்வாதார உதவிப் பணியாக ஐம்பது குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் செவ்வாயக்கிழமை 09.01.2024 அன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவரான யாழ், தீவகம் வேலணை மேற்கு, சரவணையைச் சேர்ந்த விசுவாசம் செல்வராசா (பிரான்ஸ்) அவர்களின் நிதி ஏற்பாட்டில், ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் இவ்வாறு பூமணி அம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான செயலாளரும் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினருமான ந.விந்தன் கனகரட்னம் அவர்கள் தலைமையில் அதன் நிர்வாக சபை உறுப்பினர்களான இ.மயில்வாகனம், பொறியியலாளர் சா.தவசங்கரி, ஓய்வு நிலை வங்கி முகாமையாளர் ய.தேவதாஸ் ஆகியோர் நேரடில் சென்று குறித்த பயனாளிகளுக்கு வழங்கி வைத்தனர்.



இதேவேளை கடந்த 07-01-2024 அன்று பூமணி அம்மா அறக்கட்டளையினரால் யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கும் இவ்வாறு உலர் உணவு பொதிகள் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடதக்கது.

# ஜனநாயக குரல்களை காவல்துறை கரம்கொண்டு ஒடுக்க வேண்டாம் என்கிறது குரலற்றவர்களின் குரல் அமைப்பு


குரலற்றவர்களின் குரல்
The Voice of the Voiceless
11.01.2024
The Organizer
The Voice of The Voiceless

வியாழக்கிழமை குரல் அற்றவர்களின் குரல் அமைப்பு ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்தவாரம் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் வடக்கு மாகாணத்திற்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டிருந்தார். அதன் ஒருகட்டமாக, 05.01.2023 அன்று வவுனியாவில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலும் அவர் கலந்துகொண்டார்.

அதன்போது, வடக்கு கிழக்கு மாகாணங்களை சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் ஜனாதிபதியை நேரில் சந்தித்து, "ஒப்படைக்கப்பட்ட நிலையில் காணாமல் செய்யப்பட்ட தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நடந்தது?" என்பதற்கான பதிலை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுப்பதற்காக அங்கு சென்றிருந்தனர்.

எனினும், அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு அவர்கள், காவல் துறையினரால் வழிமறிக்கப்பட்டார்கள். அதன்போது, ஜனநாயக நாட்டில் தமக்கு மறுக்கப்பட்ட அடிப்படை உரிமையை ஆட்சேபித்து, காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் அவ்விடத்தில் நின்றவாறு அகிம்சை வழியில் தமது எதிர்ப்பை பதிவுசெய்ய முட்பட்டிருந்தனர்.

அச்சந்தர்ப்பத்தில், கவனயீர்ப்பில் ஈடுபட்ட தாய்மாரை சினங்கொள்ளச்செய்து, அங்கு வலிந்ததொரு அமைதியின்மையை தோற்றுவித்த காவல்துறையினர், கைகளில் ஒப்படைத்த தம் உறவுகளுக்கு நீதி கேட்டு தெருப்போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்களை மனிதநேயமற்ற முறையில் பலவந்தமாக அடக்கி ஒடுக்கி பேருந்துக்குள் இழுத்துச் சென்று அடாவடியாக கைதுசெய்துள்ளனர்.

இது மிக மோசமானதொரு உரிமை மறுப்பாகும். இதுபோன்ற ஜனநாயக விரோதங்கள், நாட்டினுடைய எதிர்கால முன்னேற்றத்திற்கு குந்தகத்தை ஏற்படுத்தவல்லன. ஜனநாயகப் பெயர் பொறிக்கப்பட்ட இலங்கை தேசத்தினுடைய ஆளுகைத்தரப்பின் ஒற்றை வாக்குறுதிக்கு மதிப்பளித்து, தமது உற்றச் சொந்தங்களை உயிர்ப்புடன் கையளித்த உறவுகள், தம் அன்பிற்குரியவர்களை மீளத்தருமாறு, அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது எனக்கேட்டு 14 ஆண்டுகாலமாக தொடர் போராட்டங்களை நடாத்தி வருகிறார்கள்.

அந்தப் போராட்டங்களில் பங்கெடுத்த வயோதிபப் பெற்றோர்களில் பலர் உடல் உள ரீதியில் பாதிக்கப்பட்டு உயிர்நீத்துள்ளார்களே தவிர, இவர்களுக்கு இதுவரை நீதிகிட்டவில்லை. இதுபோன்று, போரின் பெயரில் படுகாயப்படுத்தப்பட்ட பல்வேறு மனக்காயங்களுக்கு மருந்திட வேண்டிய ஆட்சியாளர்கள், அதனைச் செய்ய முயற்சிக்காது மென்மேலும் காயங்களை ஏற்படுத்திக்கொண்டு உதட்டளவில் நல்லிணக்கம் பற்றிப் பேசுவது முரண்நகையானது.

பாதிக்கப்பட்ட குடிமக்களது நீதி நியாயத்திற்கான குரல்களை, காவல்துறை கரம்கொண்டு அடக்கி தீர்வினைக் காண்பதனூடாக நாட்டை மீண்டும் அழிவுக்கே இட்டுச்செல்வதாக அமையும்.

எனவே, நீதிகோரி குரலுயர்த்திய, வவுனியா வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி திருமதி. சி.ஜெனிற்றா காவல் துறையால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவரை உடனடியாக விடுவிக்க சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென "குரலற்றவர்களின் குரல்" அமைப்பினராகிய நாம் மனிதநேய சிவில் அமைப்பென்ற வகையில் வலியுறுத்த கடமைப்படுகிறோம்.

பொதுமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்து கருத்துச் சுதந்திரத்திற்கு செவிசாய்த்து ஜனநாயக பண்புடைய உணர்வு வெளிப்பாடுகளுக்கான தடைகளை அகற்றி, நடந்து முடிந்த யுத்தத்திற்கான காரண காரியங்களை கண்டடைந்து அவற்றுக்கு தாமதமற்ற தீர்வினை காண்பதன் மூலமே நாட்டில், உண்மையான நல்லிணக்கத்தை உறுதிசெய்யமுடியும் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகிறோம் - என்றுள்ளது.

# சர்வதேச பாதுகாப்பிற்க்கு செல்லவுள்ள கடற்படை ஏன் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த தயங்குகிறது

## கிராமிய மீனவர் அமைப்புக்களின் தலைவர் செ.நற்குணம்




சர்வதேச பாதுகாப்பிற்கு செல்லும் கடற்படை ஏன் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த தயங்குகிறது என யாழ்மாவட்ட கிராமிய மீனவர் அமைப்புக்களின் சம்மேன தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்துள்ளார்.

வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நடாத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, எல்லைமீறி இலங்கை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடும் இந்திய இழுவைமடி படகுகளை கட்டுப்படுத்த தயங்கும் கடற்படை சர்வதேச பாதுகாப்பிற்க்கு செல்கிறது.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுவிப்பதும் வேதனையளிப்பதாகவும், எமது வாழ்வாதரத்தையும், எமது வளங்களை அழித்துக் கொண்டிருப்பவர்களை அவ்வாறு அழிப்பதிலிருந்து கட்டுப்படுத்தாது விடுவிப்பதுதான் கவலையளிக்கிறது.

இந்திய இலங்கை அரசுகள் பேசி இவ்வாறான அழிவுகளிலிருந்து பாதுகாப்பு நடவடிக்கை எடுத்தபின்னர் விடுப்பது ஒரு மனிதாபிமான நடவடிக்கை என்றும் தெரிவித்ததுடன் அண்மையில் வடக்கிற்க்கு விஜயம் செய்த ஜனாதிபதி மீனவர் பிரச்சினை தொடர்பில் பேசுவதற்காக மீனவ அமைப்புக்களை அழைத்திருந்தபோதும் அது பேசப்படவில்லை. வெளிநாட்டு படகுகள் இலங்கையில் அனுமதி பெற்றுவந்து தொழிலில் ஈடுபடுவதை தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

# பெண்களுக்கான தொழிற்பயிற்சி முள்ளியான் கிராமத்தில் ஆரம்பம்!



வடமராட்சி நித்தியவெட்டை பகுதியில் பெண்களுக்கான தையல், மேக்கப், ஐசிங், கைவேலை மற்றும் மனைப் பொருளியல் கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வு முள்ளியான் கிராம அலுவலர் கி. சுபகுமார் தலைமையில் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமானது.





வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு, முள்ளியான் ஆகிய கிராமங்களை உள்ளடக்கி ஆரம்பிக்கப்பட்ட குறித்த கற்கை நெறியில் பல பெண்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி, போக்கறுப்பு கிராம அலுவலர் மியூரி லக்சி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான நந்தகுமார், ஜெகதாசா மற்றும் கட்டைக்காடு, நித்தியவெட்டை, போக்கறுப்பு ஆகிய பிரதேசங்களின் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுடன் மாதர்சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல், பெண்களுக்கான தொழில்வாய்ப்பை ஏற்படுத்துதல், போன்ற நோக்கங்களை மையமாக வைத்து ஆரம்பிக்கப்பட்ட இந்த கற்கை நெறியில் பங்குபெறுபவர்கள் இறுதிவரை இடைவிடாது கற்றை நெறியை உரிய முறையில் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதனையும் மருதங்கேணி பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி வலியுறுத்தினார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னார் நகர சபையின் முறையற்ற கழிவு முகாமைத்துவ செயற்பாட்டினால் தொற்றுநோய் பரவும் அபாயம் — போராட தயாராகும் மக்கள்

**- மன்னார் நிருபர் (10.01.2023)**



மன்னார் நகர சபை எல்லைக்குள் சேகரிக்கப்படும் கழிவுகளை முறையற்ற விதமாக சாந்திபுரம் காட்டுப்பகுதிக்குள் கொட்டுவதனால் டெங்கு நோய் உட்பட பல்வேறு தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சாந்திபுரம் கிராம மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மன்னார் நகரசபை முன்னதாக பாப்பா மோட்டை பகுதியில் உள்ள திண்ம கழிவகற்றல் நிலையத்தில் ஒழுங்கான முறையில் குப்பைகளை தரம் பிரித்து களஞ்சியப்படுத்தாமையினால் கொழும்பை சேர்ந்த அரசார்பற்ற நிறுவனம் ஒன்று வழக்கு தொடர்ந்து குறித்த பகுதியில் திண்ம கழிவுகளை சேகரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மன்னார் நகரசபைக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் இந்த தீர்ப்பை காரணம் காட்டி மன்னார் நகரசபை நீண்ட நாட்களாக மன்னார் நகர பகுதியில் கழிவகற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளாமல் நகரமே சுகாதார சீர்கேடுகளுக்கு உள்ளாகியிருந்தது.

இந்த நிலையில் ஏற்கனவே சாந்திபுரம் பகுதியில் மிருகங்களின் உடல் பாகங்கள், மருத்துவ கழிவுகள் உட்பட முறையற்ற விதமாக குப்பைகள் கொட்ட பட்ட நிலையில் மக்களின் எதிர்ப்பை அடுத்து குறித்த செயல்பாடு நிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் மக்களின் எதிர்ப்பை மீறி மீண்டும் நகர சபை திண்ம கழிவுகளை அனுமதியின்றி தரம் பிரிக்காது சாந்திபுர காட்டுபகுதிக்குள் கொட்டுவதாக சாந்திபுரம் பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறிப்பாக உக்காத குப்பைகளையும் இலத்திரனியல் கழிவுகளையும் நீர் நிலைகளுக்குள்ளும் பள்ளங்களுக்குள்ளும் நகரசபை கொட்டி நிரப்பி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் சாந்திபுரம் பகுதியில் தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ள மையினால் உடனடியாக நகரசபை குப்பை கொட்டும் செயற்பாட்டை நிறுத்துமாறும் கொட்டிய குப்பைகளை உரிய விதமாக அகற்றுமாறும் இல்லாவிட்டால் மக்களை திரட்டி நகர சபைக்கு முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாகவும் சாந்திபுரம் மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# மலையக தியாகிகளின் நினைவுதினம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிப்பு!



மலையக தியாகிகளின் நினைவுதினம் யாழ்ப்பாண பல்கலைக்கழக பொதுத் தூபியில் நடைபெற்றது.

மலையகத்தில் படுகொலை செய்யப்பட்ட உறவைகளையும், உரிமைக்காக போராடி உயிர்நீத்த உறவைகளையும் நினைவுகூர்ந்து இந்த நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது ஈகைச் சுடரேற்றப்பட்டு, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களால் உரைகள் ஆற்றப்பட்டன.




யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

# மட்டு நகரில் 100 வருடம் பழமைவாய்ந்த இத்திமரம் வேருடன் சரிந்து வீழ்ந்ததில் வாகன கராச் கட்டிடம் 3 வாகனங்கள் சேதம்







**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு நகர் அரசடியில் பகுதியிலுள்ள ஸ்ரீ மகா பெரிய தம்பிரான் ஆலய வளாகத்தில் இருந்த 100 வருடங்கள் பழமை வாய்ந்த இத்தி மரம் புதன்கிழமை (மாலை) ஏற்பட்ட பெற்ற சுழல் காற்றினால் அடியோடு சரிந்து விழ்ந்துள்ள தையடுத்து வாகனம் திருத்தும் நிலையத்தின் கட்டிடம் ஒன்று சேதமடைந்துள்ளதுடன் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த 3 வாகனங்கள் சேதமைந்துள்ளன.

சீரற்ற காலநிலைகராணமாக பெய்துவந்த அடைமழையுடனான காற்று சம்பவதினமான வீசியதையடுத்து குறித்த மரம் வேருடன் சரிந்து அருகிலுள்ள வாகனம் திருத்தும் நிலையத்தின் கட்டித்தின் மேல் வீழ்ந்ததையடுத்து கட்டிடம் பலத்த சேதமடைந்துள்ளதுடன் அங்கு நிறத்திவைக்க ப்பட்டிருந்த கார், கனரகவாகனம் முச்சக்கரவண்டி உட்பட 3 வாகனங்கள் சேதடைந்துள்ளதுடன் மரத்தை வெட்டி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அறியப்படுகின்றது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் மாவட்ட அரச அதிபராக கடமையினை பொறுப்பேற்ற க.கனகேஸ்வரன் அவர்களுக்கு யாழ்ப்பாணம் தென்மராட்சி மண்ணில் கௌரவிப்பு

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம் தென்மராட்சி மண்ணில் இருந்து மன்னார் மாவட்ட அரச அதிபராக கடமையினை பொறுப்பேற்ற க.கனகேஸ்வரன் (இலங்கை நிர்வாக சேவை - விசேட தரம்) அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு 7-1-2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொடிகாமம் ஏ9 வீதியில் அமைந்துள்ள நட்சத்திரமஹால் மண்டபத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் இடம் பெற்றது.

தென்மராட்சி மக்களும் பொது அமைப்புக்களும் இணைந்து நடாத்திய இந்த நிகழ்வில் அவரது தாயார் க.கனகம்மா மற்றும் மதகுருமார்கள் யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு அரச அதிபர்கள் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் விரிவுரையாளர்கள் சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகள் பாடசாலை அதிபர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சமயப் பெரியோர்கள் தென்மராட்சி ஊடகவியலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.







மாலை அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கி வாழ்த்துப் பாமாலை வழங்கி விழா நாயகன் கௌரவிக்கப்பட்டதோடு அவரது பாரியாரும் தாயாரும் கௌரவிக்கப்பட்டனர்.

# திடீரென வலிப்பு ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் உயிரிழப்பு!

திடீரென வலிப்பு ஏற்பட்ட நிலையில் யாழ்பபாணம் போதான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த குடும்பப் பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ராசா விஜயராணி (வயது 63) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண்ணுக்கு கடந்த 2023.11.28 அன்று திடீரென வலிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மூளையில் இரத்தக் கட்டி உறைந்ததே அவரது மரணத்துக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

# மக்களின் தலையில் மிளகாய் அரைப்பதை ரணில் அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் — தம்பிராசா தெரிவிப்பு




மக்களின் தலையில் மிளகாய் அரைப்பதை ரணில் அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் தம்பிராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கமானது புதிய ஆண்டிலிருந்து நினைத்துப் பார்க்க முடியாத வரிச் சுமைகளை மக்கள் மீது திணித்துள்ளார்கள். இதை மக்கள் மீதான வரி அடக்குமுறை என்றே எமது அமைப்பு கருதுகின்றது.

மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்ததைப் போல் இந்த அரசாங்கம் தொடர்ந்தும் நாட்டு மக்களை வரிச் சுமைகளால் மிதித்து வருகின்றது.

இந்த அரசாங்கம் மக்களிடம் வரியை பெற்றுக் கொண்டு மக்களுக்கு பல்வேறான நிவாரணங்களை வழங்குகின்றோம் என்று கூறிக் கொண்டாலும் உண்மையிலேயே சாதாரண மக்களுக்கு எந்தவிதமான நிவாரணங்களும் வழங்கப்படவில்லை என்பதை உண்மை.

மாறாக இந்த நாட்டில் உயர் தொழில் புரிகின்ற குறிப்பாக வைத்தியர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் போன்ற துறை சார்ந்த தரப்பினர்களுக்கு மட்டுமே அரசாங்கம் நிவாரணங்களையும், சலுகைகளையும் வழங்கியுள்ளது. ஆனால் அடிமட்டத்தில் இருக்கின்ற சாதாரண மக்கள் மென்மேலும் சுமைகளுக்கும் நெருக்கடிகளுக்குள்ளும் சிக்கி மீண்டெழ முடியாதவாறு தவிக்கின்றார்கள்.

இதனை இந்த அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும். ஜனாதிபதி ரணில் தேர்தலில் வெல்வதை நோக்கமாகக் கொண்டே நாட்டில் உயர் தொழில் புரிகின்ற வர்க்கத்தினருக்கு சலுகைகளை வழங்கியுள்ளார். ஆனால் இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு இன்றும் அரசாங்கத்தால் நிறைவேற்றப்படாமல் வெறும் கனவாகவே காணப்படுகின்றது. குறிப்பாக பொருட்களின் விலைகள் கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டில் மூன்று மடங்காக அதிகரித்துள்ளமையால் மலையக மக்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதில் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கி உள்ளார்கள்.

இதனை மலையக அரசியல் தலைமைகளும் உணர்ந்து கொண்டு தங்களுடைய மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பதையும் அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு கேட்டுக் கொள்கின்றது. மக்களிடமே வரியைப் பெற்று மக்களுக்கு நிவாரணம் நிவாரணம் வழங்குவதாக கூறிக்கொண்டு மக்களின் தலையில் மிளகாய் அரைக்கின்ற செயற்பாட்டை ரணில் அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் தம்பிராசா காட்டமாக தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் அழகுக்கலை நிலையங்களை புதிதாக அமைப்பதற்கு கடுமையான கட்டுப்பாடு

யாழ்ப்பாண மாவட்டத்தில் அழகுக்கலை நிலையங்களை புதிதாக திறப்பதற்கும் அழகுக்கலை சார்ந்த பயிற்சி நெறிகளை நடத்துவதற்கும் கடுமையான கட்டுப்பாடுகளை உள்ளூராட்சி சபைகளோடு இணைந்து நடைமுறைப்படுத்த உள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அழகுக்கலை நிபுணர்கள் ஒன்றியத்தின் தலைவர் பிரதீபா டினேஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட அழகுக்கலை நிபுணர்கள் ஒன்றியம் யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஒன்றியத்தின் தலைவர் பிரதீபா தினேஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக் காலங்களில் யாழ்ப்பாணத்தில் அழகுக்கலை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் எதுவும் இன்றி புதிய அழகுக்கலை நிலையங்கள் பரவலாக திறக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அதுமட்டுமின்றி யாழ்ப்பாணம் தவிர்ந்த பிரதேசங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வருகைதந்து யாழ்ப்பாணத்தில் புதிய அழகுக்கலை நிலையங்கள் திறக்கப்படுவது மட்டுமில்லாமல் அழகுக்கலை சார்ந்த குறுகியகால பயிற்சிப்பட்டறைகளும் தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன.

இதனால் எமது உள்ளூர் அழகுக்கலை ஆர்வம் கொண்ட மாணவர்களும் அழகுக்கலை நிபுணர்களும் பாதிக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே குறித்த கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தியுள்ளது.

எமது ஒன்றியத்தில் யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற 120க்கும் மேற்பட்ட அழகுக்கலை நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஒன்றியமானது யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு மாவட்ட செயலகத்தின் வழிநடத்தலில் இயங்கி வருகின்றது எனவும் பிரதீபா டினேஸ் தெரிவித்தார்.




இந்நிலையில் அழகுக்கலை தொழில் என்பது சருமங்கள், தோல் சார்ந்த சுகாதார விடயங்களோடு சம்பந்தப்படுவதால் உள்ளூராட்சி மன்றங்களின் சுகாதார பிரிவினரோடு இணைந்து அதற்கான அனுமதி வழங்குவதில் கடுமையான கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒன்றியம் தீர்மானித்துள்ளதாகவும் ஒன்றியத்தின் தலைவர் பிரதீபா தினேஷ் தெரிவித்தார்.

குறிப்பாக அழகுக்கலை நிலையம் ஒன்றை திறப்பதற்கான வியாபார அனுமதியை வழங்குகின்ற பொழுது குறித்த நிலையத்தின் உரிமையாளர் NVQ level 4 சான்றிதழை பெற்றிருப்பது கட்டாயமானது. இதனை பரிசீலித்தே வியாபார சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும் என யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளோம்.

எனவே இந்த விடயங்களை அனைவரும் கருத்தில் கொண்டு செயல்படுமாறும் அழகுக்கலை பயிற்சி நெறிகளை நடத்துவதென்றால் வகுப்பறை கட்டமைப்பு கட்டாயம் அமைக்கப்பட வேண்டும் எனவும் யாழ்ப்பாண மாவட்ட அழகுக்கலை நிபுணர்கள் ஒன்றியம் தீர்மானித்துள்ளது என அழகுக்கலை நிபுணர்கள் ஒன்றியத்தின் தலைவர் திருமதி. பிரதிபா டினேஷ் தெரிவித்தார்.



# வடமராட்சி கிழக்கு புதுமை நிறைந்த புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய திருவிழா கொடியேற்றம்

வடமராட்சி கிழக்கு புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய திருவிழாவிற்கான கொடியேற்றம் இன்று இடம்பெற்றது.

இலங்கையில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக திகழ்ந்துவரும் புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய திருவிழா திருப்பலி வருகின்ற 19, 20 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

கட்டைக்காடு பங்குத்தந்தை அமல்ராஜ் அடிகளார் தலைமையில் மாலை 05.00 மணிக்கு கொடியேற்ற நிகழ்வு ஆரம்பமானதை தொடர்ந்து திருப்பலியும் இடம்பெற்றது.



புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய திருவிழாவை சிறப்பிக்கும் வண்ணம் பல்வேறு பகுதிகளில் இருந்து பக்தர்கள் வருகை தருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

## Canadian High Commissioner in Colombo Meets the Governor of Northern Province

# இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர், வடக்கு மாகாண கௌரவ ஆளுநரை சந்தித்தார்



இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களை 10.01.2024 அன்று சந்தித்து கலந்துரையாடினார். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

கனடாவிலிருந்து வருகைதரும் பலர் வடக்கில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வம் காட்டுகின்றமை தொடர்பில் கௌரவ ஆளுநர் தனது மகிழ்ச்சியை தெரிவித்தார்.

நாட்டில் பொருளாதார ஆணைக்குழுவை ஸ்தாபித்ததன் பின்னர் முதலீடுகளை மேற்கொள்வதில் காணப்படும் சிக்கல்களுக்கான தீர்வுகள் எட்டப்படும் என கௌரவ ஆளுநர் தெரிவித்தார். அத்துடன் வடக்கில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள பசுமை சக்திவள திட்டங்கள், பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

## Canadian High Commissioner in Colombo made an Official Visit to Jaffna Public Library

# இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு வட மாகாணத்திற்கு கனேடியத் தூதுவர் யாழ்ப்பாணம் வருகை

### யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்கும் வருகை தந்த அவர் பொதுசன நூலகத்தின் தற்போதைய நிலைகள், தொடர்பாகமாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலனுடன் கலந்துரையாடினார்



இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வால்ஷ், தலைமையிலான மூவர் அடங்கிய குழுவினர்கள் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்கு விஜயம் மேற்கொண்டனர்.

இக்குழுவினர் தனிப்பட்ட விஜயமாக யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்கு வருகை தந்ததுடன் பொதுசன நூலகத்தின் தற்போதைய நிலைகள், வாசகர்களின் எண்ணிக்கை தொடர்பாகவும், மாணவர்களின் கல்வி கற்றல் நடவடிக்கை தொடர்பாகவும் விரிவாக யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலனுடன் விரிவாக இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வால்ஷ் கலந்துரையாடினார்.

இதில் யாழ்ப்பாணம் பொதுசன நூலகர் அனுசுயா சிவகுமார், உள்ளிட்ட தூதரக அதிகாரிகள், பொதுநூலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



# வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சர்வதேசத்தினால் நடாத்தப்படுகின்ற பொதுசனவாக்கெடுப்பின் மூலமாகத்தான் ஒரு தீர்வினை அடையமுடியும் - தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவிப்பு



வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சர்வதேசத்தினால் நடாத்தப்படுகின்ற பொது சனவாக்கெடுப்பின் மூலமாகத்தான் ஒரு தீர்வினை அடையமுடியும் என தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

50ஆவது உலக தமிழராச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட 09 பேரது 50வது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்திற்கு முன்பாக உள்ள நினைவாலயத்தில் இடம்பெற்றது. நினைவேந்தலினை செலுத்திய பின் ஊடகங்களுக்கு கருத்துதெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழமானது தொடர்ச்சியாக இனவழிப்புக்கு உட்பட்டு வருகின்ற காரணத்திலே எங்களது இனத்துக்கு சிங்கள அரசாங்கத்தினால் நிகழ்த்தப்பட்ட கொடூரத்தை நினைவுகூருவது காலத்தின் தேவையாக காணப்படுகின்றது. அனைவரும் ஒரணியாக திரண்டு நினைவேந்தலினை அனுஷ்டிக்கவேண்டும்.

இளம் சந்ததியினர்களிடம் நினைவேந்தலினை கடத்த வேண்டும். இனவழிப்பு நடைபெற்றுக்கொண்டு இருக்கின்ற தருணத்தில் 50 ஆவது ஆண்டிலே நான்கு அம்ச கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

1. வடக்கு கிழக்கு தாயகத்தில் தமிழர்கள் வாழ்ந்துகொண்டு இருக்கும் தருணத்தில் வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும்.
2. இனவழிப்புக்கு சர்வதேச நீதி வேண்டும்.
3. சர்வதேச நீதிமன்றத்திற்கு இனப் படுகொலையாளிகளை பரப்படுத்தவேண்டும்.
4. ஈழத்தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வினை வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சர்வதேசத்தினால் நடாத்தப்படுகின்ற பொதுசன வாக்கெடுப்பின் மூலமாகத்தான் அடையமுடியும் என்றார்.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஜனாதிபதியின் விஜயம் வெற்றுப் பயணம்: ஒரு துண்டு நிலத்தைக் கூட விட விடவில்லை

## யாழ்ப்பாணத்தில் ஜேவிபி சுனில்ஹந்துநெந்தி

ஜனாதிபதியின் வடக்கு விஜயம் மக்களின் பிரச்சனை தீர்க்கப்படாத மக்களின் வரிப்பணத்தை வீணடித்த வெற்றுபயணமாகவே வட மாகாண விஜயம் அமைந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெந்தி தெரிவித்தார்.

சனிக்கிழமை (6) யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களின் அடிப்படை வசதிகள் இன்னும் பூர்த்தி செய்யாத வகையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

காணி விடுவிப்பு ,மீள்கட்டுமானம் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வு, மற்றும் அரசியல் பிரச்சனைக்கான தீர்வு என தமிழ் மக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இவ்வாறான ஒரு நிலையில் வடமாகாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஒரு துண்டு காணியேனும் அந்த மக்களுக்கு விடுவித்துக் கொடுக்கவில்லை.

நான் கொழும்பிலிருந்து வருகை தரும்போது வடக்கு அதிகாரிகள் சிலருடன் கதைத்தேன் ஜனாதிபதி விஜயம் அவ்வாறு இருந்தது என அவர்கள் கூறினார்கள் வாகனப் பவனியை கண்டு இரசித்ததாகக் கூறினார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ் விஜயத்தை எதிர்த்து யாழ் மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் போராட்டம் நடைபெற்றது.

ஜனநாயக வழியில் தமது எதிர்ப்பை தெரிவித்த போராட்டக்காரர்களை பொலிசார் இழுத்துச் சென்றதையும் தாக்குதலுக்கு தயாராக இருந்த பொலிசாரையும் ஊடகங்களில் ஊடாகப் பார்த்தேன்.



நாட்டை அதல பாதாளத்திற்கு கொண்டு சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவை ஜனாதிபதி கதிரையிலிருந்து மக்கள் விரட்டியடித்த போது ரணில் விக்கிரமசிங்க பின் கதவால் ஜனாதிபதியானார்.

நாட்டை முன்னேற்ற போகிறேன் என கூறிக்கொண்டு நாட்டு வளங்களை வெளிநாட்டுக்கு தாரைவாக்கும் செயற்பாட்டில் ரணில் விக்கிரமசிங்காக ஈடுபட்டு வருகிறார்.

நாட்டை பாதுகாப்பதற்காக பொதுமக்கள் பல்கலைக்கழக மாணவர்கள் சிவில் அமைப்பினர் மேற்கொள்ளும் போராட்டங்களை பாதுகாப்பு தரப்பினர் மூலம் அடக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்.

எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்தியே ஆக வேண்டும் என அரசியல் அமைப்பு கூறுகின்றது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி கதிரையில் மீண்டும் அமர்வதற்காக தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதற்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காது வடக்குக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு உள்ளார்.

வட மாகாணத்தின் வளம் மிக்க பகுதிகளான மன்னார் பூநகரி தீவகம் போன்ற பகுதிகள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டு இருக்கும் நிலையில் அப் பிரதேச மக்களின் கோரிக்கைக்கு ஜனாதிபதி பதிலளிக்கவில்லை.

நாடு பொருளாதார ரீதியில் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் நிலையில் ஜனாதிபதி ஆடம்பரமாக வாகன தொடரணிகள் சகிதம் வருகை தந்து நான்கு நாட்கள் வடக்கில் முகாமிட்டமை மக்களின் பிரச்சனையை தீர்க்க அல்ல எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான பிரச்சாரமே என அவர் மேலும் தெரிவித்தார்.

# வாகரை கயங்கேணியில் மினி சூறாவளி 6 மீன்படி படகுகள் 3 எஞ்ஜின்கள் சேதம்

- கனகராசா சரவணன்

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை (5) இரவு வீசிய மினி சூறாவளியால் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிபடகுகள் தூக்கி வீசப்பட்டதையடுத்து 6 படகுகள் 3 எஞ்ஜின்கள் தேசமடைந்துள்ளதாக வாகரை பிரதேச செயலாளர் க.அருணன் தெரிவித்தார்.



வாகரை காயங்கேணி கடற்கரையில் மீனவர்கள் மீன்பிடி இயந்திர படகுகளை நிறுத்திவைத்திருந்த நிலையில் சம்பவதினமான திடிரென மினி சூறாவளி காற்று வீசியதையடுத்து படுகுகளை தூக்கி வீசியதில் 6 படகுகள் 3 எஞ்ஜின்கள் தேசமடைந்துள்ளது.



இதேவேளை கடந்த வாரம் சீரற்ற கால நிலையால் பெய்துவந்த கடும் மழையினால் ஏற்பட்ட ஆற்று வெள்ளம் காரணமாக கல்லரிப்பு பிரதேசத்துக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டதையடுத்து அந்த பிரதேசத்துக்கு உழவு இயந்திரம் மற்றும் படகு சேவைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதுடன் வெள்ள அனர்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த 22 குடும்பங்கள் தொடர்ந்தும் கதிரவெளி கனிஸ்ட வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தற்பேர்த வெள்ள நீர் வழிந்தோடிவருவதாகவும் அவர் தெரிவித்தார்.



# மன்னார் ஜோசப் வாஸ் நகர் மக்களால் அமைக்கப்பட்ட மறைந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் நினைவுச் சிலை திறந்து வைப்பு

- மன்னார் நிருபர் (08-01-2024)

மறைந்த மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் அமரர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் நினைவுச் சிலை மன்னார் ஜோசப் வாஸ் நகர் கிராமத்தில் அமைக்கப்பட்டு 07-01-2024 ஞாயிற்றுக்கிழமை (மாலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் ஜோசப் வாஸ் நகர் பங்கு மக்களால் அமைக்கப்பட்ட குறித்த நினைவுச் சிலை யை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.



குறித்த நிகழ்வில் அருட்தந்தையர்கள், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பங்கு மக்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

மின்சாரம் தாக்கி இளைஞன் பலியான சம்பவம் ஒன்று கிளிநொச்சியில் பதிவாகியுள்ளது. குறித்த சம்பவம் கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாத பெருமாள் ஆலய தேர் திருப்பணி வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 29 வயதுடைய ஜெகதீஸ்வரன் பவித்திரன் என்ற வவுனியா பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த இளைஞனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் கிளிநொச்சி நிதிமன்ற நீதவான் பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலை கொண்டு செல்லப்பட்டு, பின்னர் உறவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராமநாதபுரம் பொலிசார் தெரிவித்தனர்.



சம்பவம் தொடர்பில் இராமநாதபுரம் பொலிசார் விசரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பொங்குவோம், பொங்கவைப்போம் — யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்கு அகரம் நிறுவனத்தால் பொங்கல் பானைகள்!



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 70 குடும்பங்களுக்கான அகரம் நிறுவனத்தின் “பொங்குவோம் பொங்கவைப்போம்” எனும் தொனிப்பொருளில் பொங்கல் பொருட்கள் வழங்கும்





நிகழ்வு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் மதியம் 12.00 மணியளவில் அகரம் உதவும் கரங்கள் தலைவர் ஜே.மதியழகன் தலைமையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் வடமராட்சிக் கிழக்கு பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பி.ரேவதி, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் பா.நிர்மலன், சமூக சேவை உத்தியோகத்தர் ப.பரதன், பிரதம முகாமைத்துவ உத்தியோகர் பி.சுதாகினி, மதகுருவான யோக சம்பந்தக் குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான பொங்கல் பொருட்களை வழங்கிவைத்தனர்.

- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன் -

# உலகத் தமிழாராய்ச்சி மாநாடு படுகொலைகள் 50 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது



**உ**லகத்தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையின் ஐம்பதாவது ஆண்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமாக யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்றாகும்.

யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில் தலைமையில் இவ் நினைவேந்தல் நடைபெற்றது.

இதன் போது உயிர் நீத்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தி பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.



இந்த நினைவேந்தல் நிகழ்வில் மதத் தலைவர்கள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கட்சி ஆதரவாளர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக ஆராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்வில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்களும் நேரடியாகக் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்.



# இலங்கையிலிருந்து சென்ற ஐய்யப்ப பக்தர் விமானத்தில் மரணம்

**செ**ன்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்துக்கு இலங்கை தலைநகர் கொழும்பில் இருந்து சென்ற யாழ்பாணம் ஐயப்ப பக்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

தெல்லிபளையை சேர்ந்த ஐய்யப்ப பக்தரான மோகனதாஸ் (வயது 49) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

ஐய்யப்ப பக்த நண்பர்களுடன் சபரிமலைக்கு செல்ல 10ஆம் திகதி விமானத்தில் சென்னை சென்றபோது விமானம் நடுவானில் பறந்து சென்றபோது மோகனதாசுக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது. விமானத்தில் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் அவரது உடல் நிலை மோசமானதால் இதுபற்றி விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு அவசர கால மருத்துவ உதவிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சென்னையில் விமானம் தரையிறங்கியதும் தயாராக இருந்த மருத்துவ குழுவினர் விமானத்தில் ஏறி ஐய்யப்ப பக்தரை பரி சோதனை செய்தனர். அதில் மோகனதாஸ் விமான இருக்கையிலேயே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இது பற்றி தகவல் அறிந்து வந்த விமான நிலைய போலீசார் மோகன-தாஸ் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக குரோம்பேட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்துள்ளனர். நண்பர்களுடன் இருமுடி கட்டி சபரிமலைக்கு செல்ல சென்ற மோகனதாஸ் இறந்ததால் அவரது உடலை மீண்டும் இலங்கைக்கு கொண்டு வர இலங்கை தூதரக அதி-



காரிகள் மூலம் தமிழக போலீசார் நடவ டிக்கை எடுத்து வருகின்றனர்.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# வடக்கில் ஜனாதிபதி கிழக்கில் பண்பாட்டுப் பெருவிழா



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

ஒருபுறம் ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் படம் காட்டுகிறார்; படம் எடுக்கிறார். இன்னொரு புறம் அவருடைய ஆளுநர் கிழக்கில் பெருமெடுப்பில் பண்பாட்டு விழாக்களை ஒழுங்குபடுத்துகிறார். புதிய ஆண்டு பிறந்தபின் ஜனாதிபதி வடக்கிற்கு விஜயம் செய்தார். இங்கு அவர் 24க்கும் மேற்பட்ட தரப்புகளை சந்தித்திருப்பதாகத் தகவல். அவர் சந்தித்த தரப்புகளுக்குள் சிவில் சமூகங்கள்; அரசு உயர் அதிகாரிகள், வடக்கில் பரீட்சைகளில் சாதனை படைத்தவர்கள்; இசை நிகழ்ச்சிகளில், விளையாட்டுப் போட்டிகளில், பழுதூக்கும் போட்டிகளில் சாதனை படைத்தவர்கள்; தொழில் முனைவோர் என்று பல தரப்பினரும் அடங்குவர். தமிழ் மக்கள் மத்தியில் சாதனை புரிந்த தரப்புகளையும் அவர் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தார். அவர்களோடு படம் எடுத்துக் கொண்டார். சில சமயங்களில் செல்ஃபியும் எடுத்துக் கொண்டார். அச்சந்திப்புகளில் பெரும்பாலானவை அரசாங்கத்தோடு சேர்ந்து இயங்கும் தமிழ்த் தரப்புகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களே மேற்படி சந்திப்புகளில் கலந்து கொண்டார்கள்.

அரசியல் தீர்வைப்பற்றி அவர் அதிகம் கதைக்கவில்லை. இம்முறை யாரும் அதைப்பற்றித் தன்னிடம் கேட்கவில்லை என்று தனது கட்சிக்காரர்களிடம் அவர் கூறியதாக ஒரு தகவல். யு.எஸ் ஹோட்டலில் நடந்த சந்திப்பில், மாகாண சபைகளுக்கு நிதி அதிகாரம் உண்டு என்றும், நீங்கள் உங்களுடைய மாகாணத்தை கட்டி எழுப்புங்கள் என்று கூறியுள்ளார். பல்கலைக்கழக முக்கியஸ்தர்களைச் சந்தித்தபோது, புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தில் இருந்து முதலீடுகளைக் கொண்டு வாருங்கள், அதற்கு நாங்கள் உதவுவோம் என்ற தொனிப்படப் பேசியுள்ளார். புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள துறை சார் அறிவை பெற்றுக் கொள்ளலாம் என்றும் ஆலோசனை கூறியிருக்கிறார் ஏற்கனவே கனடாவைச் சேர்ந்த ஒரு தமிழ் முதலீட்டாளர் யாழ்ப்பாணத்தில் ஒரு சிறிய பல்கலைக்கழகத்தை கட்டியெழுப்பி விட்டார். அதுபோல புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது தாயகத்தில் கல்வித்துறையில் முதலீடுகளை செய்யலாம் என்பதனை அவர் சூசகமாகக் கூற விளைகிறாரா?

அதாவது இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அவரிடம் புதிதாக எதுவும் இல்லை. அவரைச் சந்தித்த அறிவுஜீவிகளும் குடிமக்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் அவருக்கு எரிச்சலூட்டும் அல்லது அவரை கோபப்படுத்தும் கேள்விகளை கேட்கவில்லை என்றும் தெரிகிறது.

இவ்வாறு ஜனாதிபதி வடக்கில் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு பலதரப்பட்டவர்களையும் சந்தித்த அதே காலப்பகுதியில், கிழக்கில் அவருடைய பிரதிநிதியாகிய ஆளுநர் பெருமெடுப்பில் பண்பாட்டு விழாக்களை ஒழுங்குபடுத்தியிருக்கிறார்.

தமிழ் முஸ்லிம் ஆகிய இரண்டு இனங்களையும் கவரத்தக்க விதத்தில் படகு போட்டி, ஏறுதழுவுதல் என்பவற்றோடு மிகப் பெருமெடுப்பிலான ஒரு பொங்கல் விழாவையும் அவர் ஒழுங்குபடுத்தியிருக்கிறார்.

செந்தில் தொண்டமான், கிழக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்டதிலிருந்து தமிழ் மக்களைக் கவரும் விதத்தில் எதையாவது செய்து கொண்டிருக்கிறார். அவர் ஆளுநராக நியமிக்கப்பட்டதன் பின்னணியில் இந்தியாவின் ஆலோசனைகள் இருந்ததாக பரவலான ஊகங்கள் உண்டு. அவருக்கு இந்தியாவில் தொடர்புகள் அதிகம். இந்தியாவின் சக்திமிக்க அரசியல்வாதிகள் மற்றும் முதலாளிகளோடு அவர் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கின்றார். இம்முறை திருகோணமலையில் அவர் ஒழுங்குபடுத்திய பண்பாட்டு விழாக்கள் அவருக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நெருக்கத்தை நிரூபிப்பவை. அதுமட்டுமல்ல இந்தியாவுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான பிணைப்புகளை அவர் கிழக்கிற்கும் பரவலாக்கி பலப்படுத்த தொடங்கிவிட்டார் என்று பொருள்.

ஜல்லிக்கட்டு அதாவது ஏறு தழுவலுக்கு அவர் இந்தியாவில் இருந்தே பயிற்சியாளர்களை கொண்டு வந்திருந்தார். மேடையில் அவர்களுக்கு நன்றியும் சொன்னார். இந் நிகழ்வுகளை தொடக்கி வைத்தவர் கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தின் இரண்டாம் தூதுவர் ஆகும். அவருக்கும் நன்றி சொல்லப்பட்டது.

திருக்கோணமையில் ஆளுநர் ஒழுங்குபடுத்திய மெகா பொங்கல் முக்கியமானது. திருகோணமலையின் நவீன வரலாற்றில் அது போன்ற பெருமெடுப்பிலான பொங்கல் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டதில்லை. நோர்வையின் அனுசரணையோடான சமாதான முயற்சிகளின்போது, திருமலையில் நடந்த "மானுடத்தின் ஒன்று கூடலை" போன்ற ஒரு பெருமெடுப்பிலான மக்கள் திரட்சி அதுவென்று கருதப்படுகின்றது. அது ஒரு விதத்தில் தமிழ் எழுச்சியைக் காட்டியது. அது தொடர்பாக கேள்விகள் விமர்சனங்கள் உண்டு. ஆனால் அவ்வளவு பெரிய மெகா பொங்கல் இதற்கு முன் திருகோணமலையில் மட்டுமல்ல வடக்கிலும் நடந்ததில்லை. இலங்கை முழுவதிலும் அதுதான் முதல் தடவை.

அந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான பெண்கள் நடனம் ஆடினார்கள். ஏனைய பண்பாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன. செந்தில் தொண்டமான் அங்கே ஒரு ஆளுநர் என்பதைத் தாண்டி ஒரு கதாநாயகனைப் போல காணப்பட்டார். அந்த நிகழ்வில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தமிழர்களின் தலைநகரம் என்று அழைக்கப்படும் திருகோணமலை என்று கூறினார்.

கிழக்கில் திருகோணமலைதான் அதிகம் சிங்களமயப்பட்டிருக்கிறது. இப்பொழுதும் சிங்கள பௌத்த மயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு தமிழ் மாவட்டம் அது. புள்ளிவிபரங்களின்படி தமிழ் மக்களின் தாயகத்தில் சிங்கள குடியேற்றங்களின் மூலம் பெருமளவுக்கு அபகரிக்கப்பட்ட ஒரு நிலத்துண்டு அது. அங்கே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனின் நினைவு வாகன ஊர்திக்குத் தலைமை தாங்கி எடுத்துச்சென்ற போது திட்டமிட்டு இறக்கப்பட்ட ஒரு குழுவினரால் தாக்கப்பட்டார். அந்த அளவுக்கு சிங்கள மயப்பட்ட ஒரு பிரதேசத்தில் இந்த அளவுக்கு பெருமெடுப்பில் பொங்கல் விழாவை கொண்டாடியமை என்பது அங்குள்ள தமிழ் மக்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்பது உண்மை. அந்த விடயத்தில் ஆளுநர் இந்தியாவையும் தனக்கு அருகில் வைத்திருக்கிறார்.

அதேசமயம் மேற்படி பொங்கல் விழாவைக் குறித்து வேறு விமர்சனங்களும் உண்டு. ஒரு புறம் மட்டக்களப்பு மேய்ச்சல் தரையை அபகரிக்கும் சிங்கள விவசாயிகள், அங்கே மாடுகளை வெட்டியும் சுட்டும் கொலை செய்து வருகிறார்கள். திருகோணமலையில் பண்பாட்டு விழா இடம்பெற்ற அதே காலப்பகுதியில் ஒரு மாடு சுருக்குத் தடத்திற்கு உயிருக்காக போராடும் படம் வெளியில் வந்தது. அவ்வாறு மேய்ச்சல் தரையை மீட்கப் போராடும் குடிமக்கள் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இணைந்து "மேய்ச்சல் தரை பட்டி பொங்கல்" என்று கூறி ஒரு whatsapp குழுவை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். இப்படியாக கிழக்கின் ஒரு பகுதியில் மாடுகளின் மேய்ச்சல் தரையை அபகரிக்கும் விவசாயிகளுக்கு அரசாங்கம் மறைமுகமாக பக்கபலமாக காணப்படுகின்றது. அது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் எவற்றையும் எடுக்காதிருக்கின்றது. அந்த விடயத்தில் நீதிமன்றத்தின் உத்தரவைக்கூட முழுமையாக நடைமுறைப்படுத்த முடியவில்லை.

இவ்வாறு ஒருபுறம் மேய்ச்சல் தரையை அபகரித்து, மாடுகளை சுட்டும் வெட்டியும் சுருக்கு வைக்கும் கொல்லும் ஒரு பின்னணிக்குள், கிழக்கின் மற்றொரு பகுதியில் காளை மாடுகளை வைத்து ஏறு தழுவும் பெருவிழாவை நடத்தியது ஓர் அரசியல் முரண் என்று விமர்சனங்கள் வெளி வருகின்றன.

அதுமட்டுமல்ல அண்மையில் பெய்த கடும் மழையால் கிழக்கில் பல கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன விக்னேஸ்வரனின் கட்சி அங்கு நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அது தொடர்பான ஒளிப்படங்கள் முகநூலில் பகிரப்பட்டுள்ளன. அவ்வாறு கிழக்கில் ஒரு பகுதி வெள்ளத்தில் தத்தளிக்க, இன்னொரு பகுதியில் பெருமெடுப்பில், பெரும் செலவில் அப்படி ஒரு பண்பாட்டு விழா தேவையா என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

மேற்படி விமர்சனங்களில் உண்மை உண்டு. ஆளுநர் செந்தில் நியமிக்கப்பட்ட புதிதில் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் மேச்சல் தரை ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் துணிச்சலான சில நடவடிக்கைகளை எடுக்க முன்வந்தார். எனினும் அவரால் ஒரு கட்டத்துக்கு மேல் முன்னேற முடியவில்லை. பிக்குகள் அவர் கூட்டம் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது உள்ளே புகுந்து குழப்பினார்கள். திருகோணமலையில் அத்துமீறிக் கட்டப்படும் விகாரைகளைக் தடுத்து நிறுத்த அவரால் முடியவில்லை. மேய்ச்சல் தரை விவகாரத்துக்கு முடிவுகட்ட அவரால் முடியவில்லை. மேய்ச்சல் தரைக்கான போராட்டம் ஆண்டு இறுதியோடு நூறாவது நாளை கடந்து விட்டது. ஆளுநரால் அதற்கு தீர்வைக் கொடுக்க முடியவில்லை.

அதே ஆளுநர் ஏறு தழுவும் போட்டியைத் திருகோணமலையில் ஒழுங்குப்படுத்தியிருக்கிறார். அதற்கு இந்தியாவிலிருந்து பயிற்சியாளர்களை அழைத்திருக்கின்றார். பயிற்சியாளர்கள் மட்டுமல்ல அந்த விழாவின் அறிவிப்பாளர்களும் இந்தியாவில் இருந்துதான் வந்திருந்தார்கள். அறிவிப்பும் தமிழகப் பாணியில் தான் இருந்தது.

இப்படியாக புதிய ஆண்டு பிறந்த சில நாட்களில் வடக்கிலும் கிழக்கிலும் நடப்பவற்றைத் தொகுத்துப் பார்த்தால் என்ன தெரிகிறது? வடக்கில் ஜனாதிபதி 13ஆவது திருத்தத்தை, அதாவது மாகாண சபையை தீர்வாக முன்வைக்கின்றார். அதன்மூலம் அவர் இந்தியாவை சந்தோஷப்படுத்தலாம். தீர்வு விடயத்தில் 13 வேண்டாம் என்று எதிர்ப்புக் காட்டும் தமிழர்களையும் இந்தியாவையும் மோத விடலாம். இன்னொரு புறம் 13 ஆவது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபையின் ஆளுநர் ஒருவர் கிழக்கில் தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டும் விழாக்களை ஒழுங்குப்படுத்தியிருக்கிறார். அதனால் அவருக்கு வரவேற்பும் கவர்ச்சியும் அதிகரித்திருக்கின்றன. அதன்மூலம் ஆளுநர் சக்தி மிக்கவர் அவர் தமிழ் பண்பாட்டை பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுப்பார் என்று நம்பிக்கையை உருவாக்க முயற்சிக்கின்றார். 13ஆவது திருத்தத்தின் கீழ் மத்திய அரசின் பிரதிநிதியாக காணப்படும் ஆளுநர் ஒருவர் கதாநாயகனாக மேலுயர்ந்துள்ளார். அதாவது வடக்கிலும் கிழக்கிலும் அரசாங்கம் என்ன செய்ய விளைகிறது என்றால் மாகாண சபைகளை பலமானவைகளாகக் காட்ட முயற்சிக்கின்றது என்று பொருள்.

---

## வீணாவின் கவிக்கணை

**ஒவ்வொரு முறையும்
அடிபட்டு விழுகையில்
வலியில் துடித்து,
மனமுடைந்து அங்கேயே
இருந்திடாமல்,
துணிந்து எழுந்து
அடுத்தநாள் தன்
வாழ்க்கையை தைரியமாக
தொடர தெரிந்தவனே
வாழ்க்கையின்
உண்மையான
வெற்றியாளனாகின்றான்.**

# கோரிக்கைகளுக்கு சுகாதார அமைச்சு செவி சாய்க்கா விட்டால் போராட்டம் விஸ்தரிக்கப்படும் — யாழ்ப்பாண மாவட்ட பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் க.சதீஸ் தெரிவிப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



சுகயீன விடுமுறை போராட்டத்தை நடாத்துமாறு எங்களுக்கு பொது சுகாதார சங்கத்தின் தலைமையினால் கூறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டம் மற்றும் வடக்கு மாகாணத்தை சேர்ந்த பொது சுகாதார பரிசோதகர்கள் கடமையில் இல்லாது விடுமுறையினை அறிவித்து இந்த போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றதாக யாழ்ப்பாண மாவட்ட பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் கணேஸ்வரன் சதீஸ் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த போராட்டத்திற்கான காரணம், சுகாதார அமைச்சிற்கு, நீண்ட காலமாக எங்களுடைய கொடுப்பனவுகளை அதிகரித்து தருமாறு நாங்கள் கோரியிருந்தோம். ஆனால் சுகாதார அமைச்சு இன்றுவரை எந்தவிதமான பதில்களையும் தராமல் தற்பொழுது குறித்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் மட்டும் கவனம் செலுத்தி அவர்களது கொடுப்பனவுகளை அதிகரித்து வழங்கியுள்ளது. ஆனால் எங்களுடைய துணை மருத்துவ சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் நிறைவுகாண் மருத்துவ சேவையை சேர்ந்த உத்தியோகத்தர்களது கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான எந்தவித முன்னேற்றங்களும் காணப்படவில்லை.

எனவே ஒரு நியாயமற்ற முறையில் சுகாதார அமைச்சு ஈடுபடுவதை கண்டித்து நாங்கள் இந்த சுகயீன விடுமுறை போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இதனடிப்படையில் தாதியர்கள், நிறைவுகாண் மருத்துவ சேவையை சேர்ந்த உத்தியோகத்தர்கள், துணை மருத்துவ சேவை உத்தியோகத்தர்களாகிய பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், மருந்தாளர்கள், ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் அனைவரும் இன்றையதினம் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றார்கள்.

இந்த இரண்டு நாட்களின் பின்னர் சுகாதார அமைச்சு எமது கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கா விட்டால் மீண்டும் இதனை விஸ்தரித்து நீண்ட நாட்களுக்கு கொண்டு செலாவதற்காகவும் எங்களுடைய பொது சுகாதார சங்கத்தின் தலைமை தீர்மானித்துள்ளது.

எங்களுடைய கோரிக்கைகளாக, முக்கியமாக எங்களுக்கான பிரயாணப்படி மிகவும் குறைந்த அளவிலேயே வழங்கப்பட்டு வருகிறது. அதிலும் ஒவ்வொரு மாகாணங்கள் ஒவ்வொரு விதமான கொடுப்பனவுகளை வழங்கி வருகிறது. தற்காலத்தில் அதிகரித்து வரும் எரிபொருள் விலைகளுக்கு ஏற்ற விதத்தில் அந்த கொடுப்பனவு தீர்மானிக்கப்படவில்லை. ஆகையால் பிரயாண படி கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும். அத்துடன் இதர கொடுப்பனவுகளையும் அதிகரித்து தருமாறு கோரியுள்ளோம்.

நீண்ட காலமாக நாங்கள் இது குறித்து அறிவுறுத்திய நிலையிலும் அது சம்பந்தமான எந்தவொரு நடவடிக்கைகளையும் சுகாதார அமைச்சு இன்றுவரை எடுக்கவில்லை என்பதால் தான் இன்றைய போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்றார்.

# அண்மையில் நமது தாயகத்தில் மூன்று சிறார்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு கைகொடுத்த கனடா கந்தசாமி ஆலய பக்தர்களுக்கும் நிர்வாகத்திருக்கும் நன்றி தெரிவிக்கின்றார் "நிவாரணம்" செந்தில் குமரன்









தாயகத்தில் மூன்று சிறார்களின் உயிர் காத்த கனடா கந்தசாமி ஆலய பக்தர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளதாக ஊடகங்கள் ஊடாக தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கின்றார் "நிவாரணம்" அமைப்பின் ஸ்தாபகர் செந்தில் குமரன் அவர்கள். அவர் தனது செய்திக்குறிப்பில் பின்வருமாறு எழுதுகின்றார்:-

உறவுகள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்.

மிகவும் மகிழ்ச்சியான செய்தி ஒன்றினை உங்களுடன் பகிர விரும்புகிறேன்.

கடந்த நவம்பர் மாதம் எனக்கு மட்டக்களப்பு மருத்துவமனையில் உள்ள சிறார்களின் இதய நோய் நிபுணர் வைத்தியகலாநிதி கார்த்திக்கிடம் இருந்து ஒரு அவசர கோரிக்கை வந்தது. அதில் வுழுகு என்னும் கடும் இருதய வருத்தத்துடன் உயிருக்கு போராடி கொண்டிருக்கும் பல குழந்தைகள், சிறார்களின் விவரங்கள் இணைக்கப்பட்டு, அவர்களுக்கு உடனடியாக தனியார் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்கு ஒழுங்கு செய்யதல் அவசியம் என்று குறிப்பிட்டிருந்தார். இதே போல் கொழும்புவிலுள்ள ஒரு சிறுமியின் கோரிக்கையும் வந்திருந்தது. உடன், என் செயற்பாட்டாளரை அவர்கள் இல்லங்களுக்கு அனுப்பி, அவர்களின் மேலதிக விவரங்கள் எடுக்கப்பட்டு, சிகிச்சைக்கு தேவையான நடவடிக்கைகளில் இறங்கினேன். இதனிடையே யாழ்ப்பாண மருத்துவமனையின் இதய சத்திர சிகிச்சை பிரிவின் மருத்துவர்களிடமிருந்து தங்களுக்கு அவசியம் தேவைப்படும் வுழுநு என்ற உபகாரணத்தினை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து தரும்படி எனக்கு கோரிக்கை வந்திருந்தது. அதன் விலையே சுமார் $80000 கனடிய டொலர்களாகும். இந்த உபகரணத்தை அவர்களுக்கு தருவித்து கொடுப்பதன் ஊடாக, கடுமையான இருதய வால்வு சிகிச்சைகளை (பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட நோயாளிகளுக்கு) யாழ்பாணத்திலேயே செய்து முடிக்கலாம். சிறார்களுக்கு தற்சமயம் யாழ்ப்பாணத்தில் சத்திர சிகிசை நிபுணர்கள் இல்லாதபடியினால், கொழும்பில் தான் சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய நிலைமை உள்ளது என்பதனை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்த வுழுநு உபகரணம் வாங்குவதற்கும், சிறார்களின் சத்திர சிகிச்சைகளுக்கான நிதி தேவைக்கும் **MGR** 107 இசை நிகழ்வினை ஒழுங்கு செய்ய தொடங்கினேன். இதனிடையே கனடா கந்தசாமி கோவில் நிர்வாக சபையினர், பெறுமனதோடு தங்கள் வளாகத்தினுள் என்னை கந்தசஷ்டி சூரன் போர் நாளிலும், ஜனவரி முதலாம் நாளிலும், பக்தகோடிகளிடமிருந்து நிதியினை பெற அனுமதித்தார்கள். சூரன் போர் - பாரணை நாட்களில், கொடையாளிகள் வரிசையில் வந்து நின்று $13,833.16 நிதியினை வழங்கிட்டார்கள். உடன் இரண்டு சத்திர சிகிச்சைகளை கொழும்பிலுள்ள லங்கா மருத்துவமனையில் ஏற்பாடு செய்தேன்.

**Dec** 25 ஆம் திகதி, கிறிஸ்துமஸ் நாளன்று கொழும்பை சேர்ந்த 2 வயது 4 மாதமான யா'மிகா ஹரனின் கடினமான இருதய சிகிச்சை வெற்றிகரமாக நிறைவுற்றது. கிட்டத்தட்ட 13 மணித்தியால அறுவை சிகிச்சையினையும் இந்த பிஞ்சு குழந்தை எதிர்கொண்டது. ஆறு நாட்கள் ***ICU Ventilator*** இல் வைத்திருந்து தான் பிள்ளையை மீட்டெடுத்தனர்.

அடுத்ததாக **Dec** 26 ஆம் நாள், மூதூர் - திருகோணமலையினை சேர்ந்த இரண்டரை வயதான குழந்தை கன்சிகா அஜந்தனின் கடினமான இதய சத்திர சிகிச்சை நலமே நடைபெற்றது. மேலும் ஒரு பிள்ளையின் சிகிச்சைக்கான நிதி தேவைப்பட்டதால் ஜனவரி முதல் நாள் கனடா கந்தசாமி ஆலயத்தில், நானும் தொண்டர்களும் காலத்தில் இறங்கி $6094.15 நிதி சேகரித்தோம். இந்த நிதி நிச்சயம் சேரும் என்ற நம்பிக்கையில், **Dec** 28 ஆம் திகதியே ஆலையடிவேம்பு - அக்கறைப்பற்றை (அம்பாறை மாவட்டம்) சேர்ந்த ஒரு வயதும் 10 மாதமும் ஆன குழந்தை சீனிஜனின் இதய சத்திர சிகிச்சையினை ஒழுங்கு செய்து வெற்றிகரமாக முடித்தோம். இந்த மூன்று மழலைகளும் உயிர் மீண்டு, இரண்டாம் பிறவி எடுத்ததற்கு காரணம், கனடா கந்தசாமி கோவில் நிர்வாகமும், அதன் பக்த கோடிகளும் ஆவர். இரு கரம் கூப்பி அந்த வறிய நோயாளிகளின் பெற்றோர் - குடும்பத்தார் சார்பில் நன்றிகளை கூறி கொள்கின்றோம். இந்த சத்திர சிகிச்சையினை செய்த நிபுணர் வைத்தியகலாநிதி காஞ்சனா சிங்கப்புலி மற்றும் மருத்துவ குழுவினருக்கும், லேடி ரிட்ஜ் மருத்துவ குழுவினருக்கும், சிறப்பு கட்டணங்கள் தந்துதவிய லங்கா மருத்துவமனை நிர்வாகத்திற்கும், என்னுடன் நிதி சேகரிப்பின் ஈடுபட்டு உதவிய அணைத்து தொண்டர்களுக்கும் கோடான கோடி நன்றி. சத்திர சிகிச்சைகளுக்கான தொகை, மற்றும் தானம் தந்தோர் விவரம் ஆகியவற்றினை எனது முகநூலில் பார்வையிடலாம்.

அன்பார்ந்த மக்களுக்கு ஒரு வேண்டுகோள்......... பல இசை நிகழ்வுகளுக்கு ஆதரவு வழுங்கும் நீங்கள், நான் பெரு முயற்சி எடுத்து ஒழுங்கு செய்யும் **MGR** 107 இசை நிகழ்விற்கும் பெரும் திரளாக வந்து உங்கள் ஆதரவினை தருமாறு அன்புடனும், உரிமையுடனும் கேட்டு கொள்கின்றேன். டொரோண்டோவின் முன்னணி இசை குழுவான **LATHAN BROTHERS** மற்றும் இசை கலைஞர்கள் - பாடகர்கள், தங்கள் நேரத்தினை இதற்காக தந்துதவுகிறார்கள். **Princess Banquet Jeya** எங்களுக்கு மிக குறைந்த கட்டணத்தில் மண்டபத்தினை தந்துதவுகிறார். நிகழ்ச்சி அட்டகாசமாக இருக்கும் என்பது உறுதி.

உங்களின் பங்களிப்புடனும், ஆதரவுடனும் மேலும் பல உயிர்கள் காப்பாற்றப்படும். யாழ்ப்பாண மருத்துவமனையின் இதய நோய் பிரிவிற்கு அவசியம் தேவையான **TOE** இயந்திரத்தினையும் பெற்று கொடுப்போம். வழமை போல் இசை நிகழ்வின் முழு செலவும் என்னுடையது. சேரும் 100 வீதமான நிதியும், மேற்கூறிய தேவைகளுக்கும், பிற மருத்துவ தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு, சமூக வலைத்தளங்களில் நிதியறிக்கை சமர்ப்பிக்கப்படும். நீங்கள் நிகழ்விற்க்கு வர இயலாவிட்டாலும் நுழைவு சீட்டினை கீழ்கண்ட நிறுவனங்களில் வாங்கி உங்கள் ஆதரவினை வழங்கலாம்.

மனிதத்தை வளர்ப்போம், அன்பினை பெருக்குவோம்! நன்றி!

செந்தில் குமரன்
416 200 7652
**www**.நிவாரணம்.**com**
**E - Transfer Detail: info@**நிவாரணம்**.com**
**fb : Singer Senthil**

**MGR 107 Show Date: Friday Jan 19th, 2024 @ 7pm**
**Venue: Metropolitan Center (Kennedy & Finch)**
**3840 Finch Ave E, Scarborough**

எம்ஜிஆர் 107 இசை நிகழ்ச்சிக்கான அனுமதிச் சீட்டுக்களை பின்வரும் இடங்களில் வாங்கி எமது நற்பணிக்கு தங்கள் ஆதரவைத் தாருங்கள் என்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்

**Brampton - Abina's Fashion (905) 459-4900**
**Etobicoke - Asia Gold (416) 746-3795**
**Markham - Fashion World (905) 471-2223**
**Scarborough - Kumar Video (416) 292-9043,**
**New Spiceland Video (647) 787-4256**
**Elamthulir Money Transfer (416) 770-6966**
**Mississauga - S.K.Fashions (905) 897-0233 &Vithus Video (905) 290-6925**

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் ரவிராஜின் துணைவியார் சசிகலா ரவிராஜ் அவர்களை தமிழரசுக் கட்சியின் தலைவராக்குவதற்கு புலம்பெயர் தமிழர்களின் அமைப்புக்கள் சில ஆர்வம்

It is time for ITAK to elect a woman as their new leader.

தற்போது மிகுந்த சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு தொடர்பாக உலகெங்கும் உள்ள தமிழர்கள் பலர் மிகுந்த ஆர்வத்துடன் கருத்துக்களைப் பகிர்ந்து வருகின்றனர்.

இந்தவகையில் சில நாட்களுக்கு முன்னர் புலம்பெயர் தமிழர் அமைப்பு ஒன்றின் முக்கியஸ்த்தர்கள் ஒன்று கூடி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் ரவிராஜ் அவர்களின் துணைவியார் சசிகலா அவர்களை தமிழரசுக் கட்சியின் தலைவராக்குவதற்கான பணிகளை தாம் ஆரம்பித்துள்ளதாகத் அறிவித்துள்ளார்கள். இந்த விடயம் தொடர்பாக மேற்படி அமைப்பு ஆங்கிலத்தில் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.



--------------------------

As members of the Tamil Diaspora, we would like to express our thoughts and provide insights on why it would be beneficial for your party to nominate a leader who is a Native Tamil woman.

ITAK party has the potential to secure at least 2 or 3 MPs in the upcoming election, but it primarily represents the Tamils. As a result, the Tamil diaspora is understandably worried about the implications of this new leadership.

ITAK is in need of a new leader. Electing a female leader, especially in Western societies, particularly those led by liberals, would provide crucial support and a listening ear for aspiring Tamil women leaders.

It is evident that there is a growing desire for women's participation in ITAK politics, and Shanthi MP was a testament to that sentiment.

In order to replace Mavai in the bonus MP position, Sumanthiran suggested choosing a female MP. However, with Mr. Thurarajasingam's help, the candidate from Amparai ended up becoming the bonus seat MP Mr. Kalaiarasan instead.

It would have been ideal if ITAK had chosen a woman as a bonus seat MP. One suitable candidate for the position could have been Mrs. Raviraj, who could have been a strong contender.

However, it appears that Sumanthiran was uncertain about endorsing her candidacy, possibly due to apprehension. Deep down, he was aware that she had garnered sufficient votes during the previous election to secure victory. However, regrettably, the government's polling and counting agents worked against her interests.

Now, let us consider Mavai as a potential ITAK leader. The fact is, Mavai is older and may not possess the necessary skills to effectively lead an organization. Additionally, he seems to lack a clear understanding of how to address the political aspirations of the Tamil people.

What about Sri Tharan? It is difficult to trust someone who has displayed a lack of loyalty. He used Suresh Premachandran and EPRLF to secure his position as an MP but changed parties once elected. Furthermore, his behavior and appearance resemble that of a Tamil movie villain, such as MMR Vasu. His actions, like altering his appearance at the FETNA conference in New York, raise questions about his integrity.

Moving on to Sumanthiran, one cannot ignore the fact that he is a Colombo Tamil and in-laws from Sinhalese. His political agenda appears to prioritize the interests of his half-Sinhalease descendants, much like Vigneswaran.

There are concerns about Sumanthiran's manipulative tendencies and his ability to shape his message to suit different audiences, which raises questions about his sincerity towards the Tamil people. In fact, some people even question whether his own wife trusts him.

Sumanthiran's lack of leadership qualities is evident, as he seems to possess traits more fitting for an advocate rather than a true leader. It appears that his focus primarily revolves around the interests of the Sinhalese community.

Sumanthiran's actions, along with Sampanthan, have regrettably impeded the prospects of attaining a positive political resolution following the 2009 massacre of the Tamils, despite the efforts of influential donor countries such as the US, EU, and Japan through the Co-Chair initiative. Their misleading statements, asserting that the Tamils seek a unified, undivided, and indivisible nation, have caused these influential nations to withdraw their dedication to establishing a sovereign Tamil homeland.

Given these considerations, it appears evident that Mrs. Raviraj would be a suitable nominee for ITAK's leadership position. She is a strong woman who fearlessly confronted Sumanthiran during the election and at the ballot counting station in Jaffna Central College. Her husband's dedication to Tamil nationalism further enhances her credibility as a candidate.

We hope you will take these points into account when making your decision.We believe nominating a Native Tamil woman as your leader would be a significant step forward for ITAK and contribute to the betterment of Tamil politics in general.

Thank you for your attention.

Tamil Diaspora News
January 12, 2024



# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
றொறன்றோ-கனடா



# பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

ஸ்ரீ விநாயகப் பெருமான் மெய்யடியார்களே!

புலம்பெயர் நாடுகளில் சைவமும், தமிழும், கலையுணர்வும், இறைபக்தியும் நிறைந்த புண்ணியசீலர்கள் வாழும் கனடா நாட்டின் ஒன்ராறியோ மாநிலத்தின் றொறன்ரோ மாநகரில் கோவில் கொண்டு உலகமுழுதும் வாழும் தமது பக்தர்களை காத்து ரட்சிக்கும் கருணைத் தெய்வமாகிய றொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானுக்குரிய புதிய கருங்கல் திருக்கோவில் அமைப்பதற்கான புனருத்தாரண திருப்பணி வேலைகள் ஆரம்பிப்பதற்கு ஸ்ரீ வரசித்தி விநாயகரின் திருவருள் கைகூடியுள்ளது.

ஸ்ரீ வரசித்தி விநாயகப்பெருமானின் திருவருள் ஆக்ஞைப்பிரகாரம் நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் **தைமாதம் 7ம் நாள் (21.01.2024) ஞாயிற்றுக்கிழமை** பூர்வ துவாதசித் திதியும் ரோகிணி நட்சத்திரமும் சித்த யோகமும் அமைந்த சிறந்த நன்னாளில் **காலை 11:35 மணிமுதல் 12:30 மணிக்குள்** வரும் மேஷ லக்ன சுபமுகூர்த்தத்தில் **பாலஸ்தாபன கும்பாபிஷேகம்** நிகழவுள்ளதனால் அடியார்கள் அனைவரும் திரளாக வந்து தரிசித்து அருள்பெற்று சகல செல்வ யோகங்களுடன் வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

விநாயகப்பெருமான் மற்றும் பரிவாரக தெய்வங்கள் 3039 Kennedy வீதியில் ஆலயத்தின் முன்பாக உள்ள மண்டபத்தில் தற்காலிகமான பாலாலயம் அமைக்கப்பட்டு 21.01.2024 முதல் நித்திய பூஜைகள் வழமைபோல் சிறப்பாக நடைபெறவுள்ளது.

| கிரியாரம்பம் | விஷேட திரவியஹோமம் | பாலஸ்தாபன கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 19.01.2024 | 20.01.2024 | 21.01.2024 |
| வெள்ளிக்கிழமை | சனிக்கிழமை | ஞாயிற்றுக்கிழமை |
| மாலை 03:30 மணிமுதல் | காலை 07:00 மணிமுதல்<br>மாலை 04:00 மணிமுதல் | அதிகாலை 6:00 மணிமுதல் |



கனடாவாழ் சைவத் தமிழ் மக்களுக்கு ஓர் வரலாற்று பதிவு ஆவணமாக முகபத்திர சிற்ப ஆகம முறைப்படி முழுமையாக கருங்கற்களினால் உருவாக்கப்படுகின்ற கனடாவின் முதல் கருங்கல் திருக்கோயிலாக வரலாற்றுப் பெருமையினையும், அழியாத புகழினையும் பதிவு செய்யும் ஆலயமாக றொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் அமையவுள்ளது என்பதை மிக மன மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

இத்திருப்பணியினை நிறைவேற்ற ஆலயத்துடன் அனைவரும் ஒன்றாக இணைந்து ராமர் அணையில் அணில்போல சிறுதுளி பெருவெள்ளமாக உங்கள் ஆதரவினையும், நிதிப் பங்களிப்பினையும் வழங்கி விரைவில் திருப்பணிகள் பூர்த்தியாகி கருங்கல் திருக்கோவிலில் ஸ்ரீ வரசித்தி விநாயகரைப் பிரதிஷ்டை செய்து மஹாகும்பாபிஷேகம் நிகழ்த்திட நீங்கள் அனைவரும் மனமுவந்து தாமாக முன்வந்து இப் பாரிய திருப்பணியினை நிறைவேற்றிதர வேண்டும் என ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருவருளுடன் வேண்டுகின்றோம்.

மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேக விழாவில் அந்தணப் பெருமக்கள், ஆலய நிர்வாகத்தினர், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை இணையத்தள ஊடகத்துறையினர், தமிழ் சமயப் பெரியோர்கள், சமூக நலன் விரும்பிகள், தமிழ் பற்றாளர்கள், கல்விமான்கள், சான்றோர்கள், கலைஞர்கள், தொண்டர் ஸ்தாபனத்தினர், வர்த்தகப் பிரமுகர்கள், மன்ற உறுப்பினர்கள், சமூக ஊக்குவிப்பாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், உபயகாரர்கள், தொண்டர்கள், சமய சொற்பொழிவாளர்கள், பஜனைக் குழுவினர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மேன்மை கொள் சைவநீதியும் தேமதுரத் தமிழும்
உலகெலாம் விளங்கும் வகை செய்வோம்**

றொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
Sri Varasiththi Vinaayagar Hindu Temple
3025 Kennedy Road, Unit-10. Scarborough

இங்ஙனம் சிவப்பணியில் நிற்கும்
"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்**
ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை.

416.291.8500 vinaayagar.com vinaayagar


UHCOSA
Est 1994
உரும்பிராய் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா
பெருமையுடன் வழங்கும்
உரும்பிராய் பாடசாலைகளின்
30ஆவது ஆண்டு பொங்கல் விழா - 2024
சனிக்கிழமை, ஜனவரி 20ஆம் திகதி 2024 மாலை 5:00 மணி
PONGAL VIZHA
Saturday, January 20th 2024 @ 5:00pm
Thamil Isai Kalaamantram
#3 - 1120 Tapscott Road, Scarborough
பொங்கல் விழாவில் இயல், இசை நாடக நிகழ்வுகளை
கண்டு களிக்க அரியதோர் வாய்ப்பு
திரு.மோகனசுந்தரம் அவர்களின் காமெடி பேச்சு
சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெற உள்ளது என்பதை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.
நிகழ்ச்சிகள் குறித்த நேரத்தில் ஆரம்பமாகும்.
மேலதிக விபரங்களுக்கு:
416 258 5196 | 416 805 7392
416 833 7729 | 647 710 7816
urumpiraischoolsosa.ca@gmail.com


Lankasri
தமிழ்
மரபுத் திங்கள்
MOIS DU PATRIMOINE TAMOUL
TAMIL HERITAGE MONTH 2024
தை மாதம் 21ம் திகதி 2024
ஞாயிறு காலை 10 மணிக்கு
JAN 21st 2024
Sunday 10:00AM
LE CHATEAU ROYAL
3500 BLVD DU SOUVENIR, LAVAL, QC H7V 1X2
'ஒற்றுமையே எங்கள் பலம்'
மேலதிக தொடர்புகளுக்கு : 514 360 8511


இனிய
தைப்பொங்கல்
மற்றும்
தமிழ் மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்
Happy Thai Pongal
& Tamil Heritage Month
Raymond Cho
MPP - Scarborough North
Constituency Office
Unit B, 4559 Sheppard Ave E
Scarborough, ON M1S 1V3
(416) 297-5040
raymond.choco@pc.ola.org
www.raymondcho.ca

# கைதுகள் மூலம் அப்பட்டமான சனநாயகப் படுகொலைகளை தொடர்ந்தும் நிகழ்த்தும் சிறிலங்கா அரசு – யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

கடந்த வாரம் சிறிலங்கா அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கிற்கான பயணத்தின் போது அறவழியில் போராடிய வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றா அவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையினை மாணவ சமுதாயமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டிப்பதோடு, அப்பட்டமான சனநாயக உரிமை மீறலாகவும் இதனைப் பதிவு செய்கின்றது என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அனைத்துலகச் சமூகத்தின் முன்னால் சனநாயக உரிமைகள் வழங்கப்படுவதாக ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு, அறவழியில் போராடிய மக்களின் உரிமையினை கிஞ்சித்தும் பொருட்படுத்தாது கைதுகள், விசாரணைகள் மூலமாக அடக்கியொடுக்குவதற்கு முயலும் இந்த சிறிலங்கா அரசின் போக்குகள் உலக அரங்கின் முன்னால் வெட்ட வெளிச்சமாக்கப்பட வேண்டியவையாகும்.

சிறிலங்கா அரச படைகளினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நியாயமானதும் நீதியானதுமான பதிலொன்றைக் கூறுவதற்கு இயலாத அரசு, அவற்றுக்கான பதில் கோரிப் போராடும் உறவுகளை இன்று வரையில் வீதியில் விட்டுள்ளதோடு, அவர்களுக்கான பரிகாரநீதியையும் மறுத்து வருகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் தங்கள் உறவுகளுக்கு நேர்ந்த கதிக்கு பதில் கோரி அறவழியில்ப் போராடும் உறவுகளின் போராடும் உரிமையினையும் கருத்துரிமையினையும் அடக்கியொடுக்கும் செயற்பாடாகவே வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றா அவர்களின் கைது நோக்கப்பட வேண்டியுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக குரல் கொடுத்துவரும் இன்னபிற செயற்பாட்டாளர்கள், உறவினர்களை புலனாய்வுப்பிரிவினர் உள்ளிட்ட அரச படைகள் அச்சறுத்தும் போக்கும் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றது என்பது யாவரும் அறிந்ததே! இதுபோன்ற அப்பட்டமான சனநாயக மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் சிறிலங்கா அரசு உதட்டளவில் நல்லிணக்கம் பேசும் செயல்களில் ஈடுபடாமல், உளச்சுத்தியுடன் நிலையான நல்லிணக்கத்தினை எட்டுவதற்கு முயல வேண்டும். தமிழ் மக்களை ஓரவஞ்சனையுடன் வஞ்சித்து விட்டு நல்லிணக்கம் பற்றிய உரையாடல்களை மேற்கொள்வதென்பது 21ஆம் நூற்றாண்டில் நவீன வடிவில் அடிமைத்தனத்தை தமிழ் மக்கள் மீது திணிக்க முயல்வதாகும் என்றுள்ளது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
JAFFNA UNIVERSITY STUDENTS' UNION

ஊடக வெளியீடு | Press Release

11.01.2024

கைதுகள் மூலம் அப்பட்டமான சனநாயகப் படுகொலைகளை தொடர்ந்தும் நிகழ்த்தும் சிறிலங்கா அரசு!

நன்றி




இனிய
தைப்பொங்கல்
மற்றும்
தமிழ் மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்
Happy Thai Pongal & Tamil Heritage Month
Hon. Mary Ng, MP
Markham-Thornhill
16 Esna Park Drive, Unit 107, Markham ON L3R 5X1
905-479-8100 | Mary.Ng@parl.gc.ca
maryngmp.ca | @maryngMarkhamThornhill
@Mary_Ng | @Mary_Ng

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாத் தமிழ் மரபியல் நடுவம் நடத்திய 2024 ம் ஆண்டிற்குரிய தமிழர் மரபுரிமை மாதத்தின் தொடக்க விழா



கனடாவில் இயங்கிவரும் தமிழ்ச் சமூகம் மற்றும் மொழி சார்ந்த சேவைகளில் ஈடுபட்டு வரும் அமைப்புக்களின் சம்மேளனமாய் விளங்கும் கனடாத் தமிழ் மரபியல் நடுவம் நடத்திய 2024ம் ஆண்டிற்குரிய தமிழர் மரபுரிமை மாதத்தின் தொடக்க விழா 08-01-2024 திங்கட்கிழமையன்று மாலை மார்க்கம் நகரில் அமைந்துள்ள சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.







கனடா தமிழ்க் கல்லூரி மற்றும் அறிவகம் ஆகிய தமிழ் மொழி கற்பித்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புக்கள் இந்த கனடாத் தமிழ் மரபியல் நடுவத்தின் முக்கிய உறுப்புரிமை கொண்டவர்களாக உள்ளதால் நூற்றுக்கணக்கான தமிழாசிரியைகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நகரசபை உறுப்பினர்கள் கல்விச் சபை உறுப்பினர்கள் உட்பட பல பிரமுகர்கள் அங்கு அழைக்கப்பட்ட விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். அமைப்பின் சார்பில் பொன்னையா விவேகானந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அங்கு விசேட விருந்தினர்களாக அழைக்கப்பெற்றிருந்த அரசியல் பிரமுகர்களின் உரைகளில் முக்கிய கருப்பொருளாக தமிழ் மரபுரிமை மாதம் மற்றும் இலங்கை அரசின் இனப்படுகொலைகளுக்காக அந்த கொடிய அரசிற்கு தகுந்த தண்டனை அல்லது பொறுப்புக் கூறலை கொண்டுவர நாம் கடுமையாக உழைக்க வேண்டும் என்ற விடயமும் முன்னிலைப் படுத்தப்பட்டிருந்தது.







இந்த வருடத்திற்குரிய தமிழ் மரபுரிமை மாதக் கருப்பொருளாக கனடாத் தமிழ் மரபியல் நடுவம் அறிமுகம் செய்துள்ள "நாட்டார் இயல்" என்னும் தலைப்பிலான பதாகை வெளியிடப்பெற்றது. அதன் பிரதிகள் அங்கு வருகை தந்திருந்த பிரமுகர்களுக்கும் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பெற்றன.

மிகவும் நேர்த்தியாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த இந்த விழாவில் கனடாவின் மத்திய அரசின் சார்பாக அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களும் மாகாண அரசின் சார்பில் துணை அமைச்சர் விஜேய் தணிகாசலம் மற்றும் உறுப்பினர் அரிஸ் பாபிகயன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரைகள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.







# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவரும் பன்முகப் படைப்பாளியுமாகிய அகணி சுரேஷ் அவர்கள் நிலைநாட்டியுள்ள "சிறுகதைகள் வாசிப்புச் சாதனை"



கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவரும் பன்முகப் படைப்பாளியுமாகிய அகணி சுரேஷ் அவர்கள் அண்மையில் இணையவழி ஊடாக நிலைநாட்டியுள்ள சிறுகதைகள் வாசிப்பு சாதனையை உலகெங்கும் உள்ள கலை இலக்கிய நண்பர் பாராட்டியவண்ணம் உள்ளார்கள்.

திரு. அகணி சுரேஷ் அவர்கள் 06-01-24 காலை 09:55 மணிக்கு (இந்தியா நேரப்படி) தொடங்கி 08-01-24 அதிகாலை 02:55 மணிக்கு நிறைவு செய்துள்ளார்.



இந்த சிறுகதை வாசிப்புச் சாதனை முயற்சியில் அவர் தொடர்ந்து 133 எழுத்தாளர்களுடைய 133 சிறுகதைகளை வாசித்து சாதனை நிகழ்த்தினார்.

41 மணி நேரம் நடைபெற்ற இந்த சாதனை உலக சாதனையாக ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் மற்றும் செவெ வேல்டு ரெக்கார்ட்ஸில் பதிவு செய்யப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த சாதனையை வெற்றிகரமான நிலைநாட்டியுள்ளதை Amb. DR. WRH. HA. HOF சி. கலைவாணி, (பொது செயலாளர் செவெ குரூப்) அவர்கள் உறுதி செய்து சாதனைச் சான்றிதழ் வழங்கியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவரும் பன்முகப் படைப்பாளியுமாகிய அகணி சுரேஷ் அவர்கள் நிலைநாட்டியுள்ள சிறுகதைகள் வாசிப்புச் சாதனை முயற்சிக்குத் துணையாக கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தைச் சேர்ந்த பல அங்கத்தவர்கள் உறுதுணையாக இருந்தும் நித்திரை விழித்திருந்து அவருக்கு ஒத்தாசை வழங்கினார்கள் என்பதும் பாரரட்டுக்குரியது.

# கனடா ஸ்காபுறோ நகரில் தமிழ் மணம் பரப்பி நிற்கும் Majestic City தமிழர் அங்காடியில் நம் மொழியின் பயன்பாடு நீக்கப்பட்டு "தமிழர் அங்காடி" என்ற பெயர் அழிக்கப்படுமா?




சில ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவின் ஸ்காபுறோ நகரில் மார்க்கம்-மெக்னிக்கல் சந்திப்புக்கு அருகில் பிரமாண்டமான முறையில் திறந்து வைக்கப்பெற்ற Majestic City என்னும் தமிழர் பல் பொருள் அங்காடி தமிழ் மக்களின் அடையாளமாகத் திகழத் தொடங்கியது. அதற்கு முக்கிய காரணங்களில் சிலவற்றை நாம் எடுத்துக்கொண்டால், அங்கு தமிழ் பேசும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களே தங்கள் வர்த்தகத்தை நடத்தத் தொடங்கினார்கள்.

மற்றைய காரணம். மேற்படி ஆயதநளவஉை ஊவைல என்னும் தமிழர் பல் பொருள் அங்காடியின் ஏகபோக உரிமையாளர் வேற்று இனத்தவராக இருந்தாலும். பலரது ஆலோசனையின் பேரில் அங்காடியின் உட்பக்கத்தில் அமைக்கப்பெற்ற நடைபாதைகளுக்கு எமது தாய்த் தமிழகத்தில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களின் பெயர்களே சூட்டப்படுவதற்கு பூரண சம்மதத்தை வழங்கியிருந்தார்.

இந்த Majestic City என்னும் தமிழர் பல் பொருள் அங்காடி திறக்கப்படுவதற்கு முன்னரே பல தமிழ் பேசும் அன்பர்கள் அங்கு முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டனர். தமிழ் பேசும் வர்த்தகர்களை கவரும் வகையில் Majestic City வர்த்தக வளாகத்தின் பொது முகாமையாளராக ஆற்றலும் அனுபவமும் கொண்ட தமிழ் பேசும் அன்பர் ஒருவர் நியமனம் செய்யப்பெற்றார்.

வெளிநாடுகளிலிருந்து கனடாவிற்கு பயணம் செய்யும் தமிழ் மக்கள் இந்த தமிழர் அங்காடிக்கு படையெடுக்கும் காட்சிகளை நாம் கண்டுள்ளோம்.

அங்கு சில மணிநேரங்களை கழிக்கின்றபோது நமது தாய் மண்ணுக்கு சென்று வந்தது போன்று தாய் மண்ணின் சுகந்தத்தையும் சுவையான உணவுவகைகளையும் நுகர முடிந்தது. அதற்கு மேலாக அங்கு வர்த்தக நிலையங்களை அமைந்துள்ள பகுதிகளில் வீதிப் பெயர்களாக நம் தமிழர் தேசத்தின் ஊர்களின் பெயர்களை நாம் உச்சரித்து மகிழ்ந்தோம்.

ஆனால் சில நாட்களுக்கு முன்னர் எமக்கு கிடைத்த செய்தி எம்மில் சிலரை அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்திற்கும் உள்ளாக்கியுள்ளதை உணர்ந்தவர்களாக உறைந்து போயுள்ளோம்.



அங்கு வேற்றினம் ஒன்று காலுன்ற முயலுகின்றது என்றும் அதற்கு முன்னேற்பாடாக அங்கு பொது முகாமையாளராக பணியாற்றிய தமிழ் பேசும் அன்பர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்றும் புதிதாக அந்த குறிப்பிட்ட உரிமையாளரின் இனம் சார்ந்த உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவுள்ளன என்றும் இவ்வாறான நிலையில் சில தமிழ் பேசும் வர்த்தகர்கள் தங்கள் நிறுவனங்களை வேறு இடங்களுக்கு மாற்றிக் கொள்ள முனைவதையும் காணக்கூடியதாக உள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில் அங்கு உறுதியாக தங்கள் வர்த்தக நடவடிக்கைகளை நிறுவியுள்ள பல தமிழ் பேசும் அன்பர்கள் இந்த மாற்று நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து வளாகத்தின் உரிமையாளரோடு பேச்சுவார்த்தைகள் நடத்த தீர்மானித்துள்ளாதாகவும் அறியப்படுகின்றது.

எதற்கும். இந்த ஆயதநளவஉை ஊவைல என்னும் தமிழர் பல் பொருள் அங்காடியின் எதிர்காலம் எப்படியிருக்கப்போகின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம் என்கிறார்கள் சில வாடிக்கையாளர்கள்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# 4வது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளை!

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளையதினம் இடம்பெறவுள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெறவுள்ளது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் பொது மக்களும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் எவ்வித பேதமுமின்றி கலந்துகொண்டு அஞ்சலியை செலுத்த வேண்டுமென உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவின் சார்பில் முன்னாள் மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந் அழைப்புவிடுத்துள்ளார்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக ஆராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான அரசு, காவல்துறையினரை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்தியது.

இதன்போது ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதுட்டுமன்றி தமிழர்கள் மனத்தில் நீங்காத வடுக்களாக இந்தப்படுகொலைச் சம்பவம் பதியப்பட்டது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

10.01.1974 அன்று தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டோர் விபரம்:

- வேலுப்பிள்ளை கேசவராஜன் (வயது 15 - மாணவன்)
- பரம்சோதி சரவணபவன் (வயது 26)
- வைத்தியநாதன் யோகநாதன் (வயது 32)
- ஜோன்பிடலிஸ் சிக்மறிங்கம் (வயது 52 - ஆசிரியர்)
- புலேந்திரன் அருளப்பு (வயது 53)
- இராசதுரை சிவானந்தம் (வயது 21 - மாணவன்)
- இராஜன் தேவரட்ணம் (வயது 26)
- சின்னத்துரை பொன்னுத்துரை (வயது 56 - ஆயுள்வேத வைத்தியர்)
- சின்னத்தம்பி நந்தகுமார் (வயது 14 - மாணவன்)

# இணுவில் மருதனார்மடம் சுன்னாக ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் தேவஸ்தானத்தின் ஹனுமத் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பஞ்சரக ஆஞ்சநேயரின் இரதோற்சவம்



வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் மருதனார்மடம் சுன்னாக ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் தேவஸ்தானத்தின் ஹனுமத் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழாவின் பஞ்சரக ஆஞ்சநேயரின் இரதோற்சவம் இன்று பக்திபூர்வமாக இடம்பெற்றது.





கருவறையில் வீற்றிருக்கும் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய ருக்கும், ஏனைய பாரிவார தெய்வங்களுக்கும் விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றன.

கடந்த 29.12.2023 அன்று ஸ்ரீமத் ஆஞ்சநேய ஜெயந்தி இலட்சார்ச்சனைப்பெரு விழா ஆரம்பமாகி 09 நாளில் இரதோற்சவமும், நாளை ஆஞ்சநேய ஜனனதின ஜெயந்தியும் இடம்பெற்று ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா இனிதே நிறைவடையும்

இதில் பல பாகங்களில் இருந்து வருகைதந்த பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# தனியார் பேருந்து சாரதி மீது பருத்தித்துறையில் வாள் வெட்டு!

வடமராட்சி பருத்தித்துறை பேருந்து நிலையத்தில்வைத்து வடமராட்சி கிழக்கு தனியார் போக்கு வரத்து பேருந்து சாரதி மீது வாள்வெட்டு தாக்குதல் 10-01-2024 புதன்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அதி காலையில் முகமூடி அணிந்து உந்துருளியில் வந்தவர்களால் பருத்தித்துறையிலிருந்து கட்டைக்காடு நோக்கு பயண சேவையில் ஈடுபடும் வடமராட்சி கிழக்கு தனியார் போக்குவரத்து சேவை சங்க பேருந்திற்க்கு அருகில் வந்து வடமராட்சி கிழக்கு தனியார் பேருந்து உரிமையாளரும் சாரதியுமான தேவகுமார் என்பவர் மீது சரமாரியான வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் படுகாயமடைந்த பேருந்து சாரதியை ஊடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்பபாணம் போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாள்வெட்டை நடத்தியவர்கள் தொடர்பில் பருத்தித்துறை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டு வவுணதீவில் கைது செய்யப்பட்ட த.தே.ம. முன்னணி அமைப்பாளர் மற்றும் அவரது மகனும் பயங்கரவாத தடுப்பு பிரிவிடம் விசாரணைக்கு ஒப்படைப்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் மாவீரர்களுக்கு விளக்கு ஏற்றி நினைவேந்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர் அவரது மகன் உட்பட்ட இருவரையும் விசாரணைக்காக பயங்கரவாத தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்க அனுமதியளித்ததுடன் எதிர்வரும் 24ம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் மட்டு நீதவான் நீதிமன்ற நீதவான் செவ்வாய்க்கிழமை (10) உத்தரவிட்டார்.

கடந்த நவம்பர் 27ம் திகதி தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் குககுலராஜா (குகன்) அவரது மகன் ஆகியேர் வவுணதீவு பொலிஸ் நிலையத்துக்கு முன்னபல் மாவீரர்களுக்கான விளக்கேற்றி அஞ்சலி செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்தவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் சக்கரைவியாதியுள்ள மாவட்ட அமைப்பாளருக்கு காலில் ஏற்பட்ட பாரிய காயம் காரணமாக சிறைச்சாலை அதிகாரிகளினால் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுவருகின்றனர்.

இந்த நிலையில் நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு செவ்வாய்கிழமை எடுத்துக் கொண்டபோது மாவட்ட அமைப்பாளர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவருவதால் அவர் நீதிமன்றில் ஆஜராகாத நிலையில் அவரது மகன் ஆஜராகிய நிலையில் கொழும்பில் இருந்து வருகைதந்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கைது செய்யப்பட்டவர்களின் கையடக்க தொலைபேசியில் புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள விடுதலைப் புலிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளதால் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள அனுமதி கோரியதையடுத்து அவர்களுக்கு நீதவான் மேலதிக விசாரணைக்கு அனுமதியளித்ததுடன் எதிர்வரும் 24ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# யாழ்ப்பாணத்தில் "வேலியே பயிரை மேயும் கொடுமை"

## கோப்பாய் பொலிஸ் உத்தியோகத்தர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது!

ஐஸ் போதைப்பொருளை கைமாற்ற முயன்ற யாழ்ப்பாணம் - கோப்பாய் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் 11-01-2024 அன்று கைது செய்யப்பட்டுள்ளார். திருகோணமலை மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன் அவரிடம் இருந்து 50 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மன்னார் மாவட்டத்தை சேர்ந்தவர். அவர் விடுமுறைக்காக வீட்டிற்கு சென்றிருந்தார். இதன்போது திருகோணமலை பகுதிக்கு சென்று போதைப்பொருளினை கைமாற்ற முயன்றபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார சேவைகள் சிற்றூழியர்கள் பணிப்பகிஸ்கரிப்பில் குதிப்பு



- மன்னார் நிருபர் (11-01-2024)

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் சிற்றூழியர்கள் சங்கத்தினர் வியாழக்கிழமை (11) காலை முதல் சுகயீன விடுமுறை, வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார சேவைகள் சிற்றூழியர்களும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார சேவைகள் சிற்றூழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக சம்பள அதிகரிப்பு, ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார சேவைகள் சிற்றூழியர்கள் சுகயீன விடுமுறை, வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் தூர இடங்களில் இருந்து மருத்துவ உதவிகளை பெற்றுக்கொள்ள மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்த நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

கனடிய செய்திகள் Canadian News

# "கனடாவில் தமிழ் மொழியையும் தமிழர் கலைகளையும் வளர்ப்பதில் தமிழ் ஊடக நிறுவனங்களின் பங்களிப்பைக் கண்டு வியக்கின்றேன்"

## "அனலை எக்ஸ்பிரஸ்" ஊடகக் குழுமம் கனடாவில் நடத்திய "பாரம்பரியம்" முழு நீள முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் புகழாரம்

"நான் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் தமிழ் பேசும் மாணவ மாணவிகளை சந்தித்து உரையாடியிருக்கின்றேன். அத்துடன் இங்குள்ள தமிழ் மொழி சார்ந்த பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் நெருக்கமாகப் பழகி வருகின்றேன். இவ்வாறான நிலையில். கனடாவில் தமிழ் மொழியையும் தமிழர் கலைகளையும் வளர்ப்பதில் தமிழ் ஊடக நிறுவனங்களின் பங்களிப்பைக் கண்டு வியக்கின்றேன்".

இவ்வாறு கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்ற "அனலை எக்ஸ்பிரஸ்" ஊடகக் குழுமம் கனடாவில் நடத்திய "பாரம்பரியம்" முழு நீள முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் புகழாரம் சூட்டினார்.

அன்றைய தினம் ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சருடன் ஒன்றாரியோ மாகாண அரச-ின் போக்குவரத்து துறை இணைஅமைச்சர் விஜே

















தணிகாசலம். மாகாண சபை உறுப்பினரும் அமைச்சொன்று பாராளுமன்றச் செயலாளருமான லோகன் கணபதி மற்றும் மாகாண சபை உறுப்பினர் அரிஸ் பாபிகியன் ஆகியோர் அங்கு சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு விழா ஏற்பாட்டாளர்களை வாழ்த்தி உரையாற்றினார்கள். "அனலை எக்ஸ்பிரஸ்" ஊடகக் குழுமத்தின் தலைவரும் நண்பருமான விமல் தவராஜா அவர்கள் தனது துணைவியாளர் மற்றும் சக ஊடகவியலாளர்கள் சகிதம் மிகவும் கச்சிதமான முறையில் இவ்வருடத்தின் "பாரம்பரியம்" முத்தமிழ் விழாவை நடத்தினார்.

அவரை வாழ்த்தி பலரும் உரையாற்றினார்கள்.

அன்றை முத்தமிழ் விழாவில் இயல் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளில் சுமார் 500 கலைஞர்கள் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.





# "தமிழ்நாடு அரசையே ஏமாற்றத் துணிந்திருக்கும் "போலி"யான பண்பாட்டு இயக்கத்தின் பிரதிநிதிகள்"

இலங்கை செய்திகள் Sri Lanka News

## யாழ்ப்பாணத்திலிருந்து "உண்மையான" உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் விடுத்துள்ள செய்தி

யாழ்ப்பாணத்தில் 1974ம் ஆண்டு இடம்பெற்ற உலகத் தமிழாராச்சி மாநாட்டின் இறுதி நாள் அன்று இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக பொலிசாரின் தாக்குதலினாலும் சன நெரிசலிலும் கொல்லப்பட்டவர்களது 50வது ஆண்டு நினைவஞ்சலியில் கலந்து கொள்வதற்கான நான் யாழ்ப்பாணம் வந்துள்ளேன். இவ்வேளையில் எமது உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகத்தைக் கொண்டு கனடா தேசத்திலிருந்து எமது இயக்கத்தின் முக்கிய உறுப்பினர் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர். எமது இயக்கத்தின் இலங்கைக் கிளை உறுப்பினர்களோடு இணைந்து அமெரிக்காவின் கலிபோர்னியா நகரத்தின் இவ்வாண்டு நடைபெறவுள்ள உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பொன்விழாவை சிறப்பாகக் கொண்டாடுவகையில் எமது கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் சில தினங்களுக்கு முன்னர் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் "போலியான" கிளையொன்றை மலேசியாவில் நிறுவி அதன் "மூலகர்த்தா"வாக விளங்கும் ஒருவருடன் புலம் பெயர்ந்து பல நாடுகளில் வாழும் சில இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட சில "புல்லுருவிகள்" ஒன்று சேர்ந்து சென்னையில் "போலியான" உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் என்ற பெயரில் சிறிய வைபவம் ஒன்றை நடத்தியுள்ளனர். அதற்கு தற்போதைய தமிழ்நாடு அரசின் அமைச்சர் பெருமகன் ஒருவரும் கலந்து கொண்டுள்ளார்.

இந்த ஏமாற்றுத் தனத்தை "உண்மையான உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் உறுப்பினர்களாகிய நாம் உலகெங்கும் பல நாடுகளில் இயங்கிவரும் எமது இயக்கத்தின் நூற்றுக்கணக்கான அங்கத்தவர்கள் அனைவரும் கண்டு மிகுந்த ஆச்சரியத்திற்கு உள்ளானோம்.


இவ்வாறான தமிழ்நாடு அரசாங்கத்தையே ஏமாற்றும் அளவிற்கு இந்த "போலியான" புல்லுருவிகள்" துணிந்து விட்டார்களே என்று எண்ணி இவர்களது "போலித்தனத்தை" வெளிச்சத்திற்கு கொண்டுவர வேண்டும் என்ற கலந்துரையாடியுள்ளோம். அத்துடன் இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

எனவே. கனடாவில் தலைமையகத்தைக் கொண்டு சிறப்பாக இயங்கிவரும் "உண்மையான உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயற்பாடுகளை விஸ்தரிக்கவும் அமெரிக்காவில் எமது இயக்கத்தின் பொன்விழாவை சிறப்பாக நடத்தவும் நாம் திட்டங்கள் வகுத்து செயற்பட்டு வருகின்றோம். எமது முயற்சிகளுக்கு உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் தங்கள் நல்லாதரவை வழங்க வேண்டும். அத்துடன் "போலியான" பெயரில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்திற்கு கலங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்படும் இந்த "புல்லுருவிகளை" இனங்கண்டு ஒதுக்கவும் வேண்டுகின்றோம்.

மேலும், 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் சாலை இளந்திரையன் அவர்களை ஸ்தாபகத் தலைவராகக் கொண்டு ஆரம்பிக்கப்பெற்றும் அவருக்குப் பின்னர் மலேசியாவைச் சேர்ந்த பேராசிரியர் வீரப்பன் அவர்களை தலைவராகத் தெரிவு செய்து அவர் தொடர்ச்சியாக 25 ஆண்டுகள் சிறப்பான முறையில் எமது இயக்கத்தை வழிநடத்திச் சென்றார்.

எமது இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள் மூன்றாகும். உலகெங்கும் பரந்து வாழும் எமது மக்கள் மற்றும் இளைய தலைமுறையைச் சேர்ந்த என அனைவரிடமும் பண்பாட்டுச் சீரழிகள் மற்றும் மொழியைப் புறக்கணிக்கும் பழக்கங்கள் போன்றவை பரவி விடாமல் பாதுகாப்பது அல்லது அறிவூட்டுவது. இரண்டாவது எமது தாயகமான இலங்கை மற்றும் தாய்த் தமிழகமான தமிழ்நாடு மற்றும் மலேசியா சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு இடையில் தமிழர் பண்பாடு தொடர்பான கருத்தரங்குகளை நடத்தி அவர்களுக்கிடையில் நெருக்கமான உறவினை ஏற்படுத்துதல். மூன்றாவதாக கலாச்சாரத்தைப் புறக்கணிக்கும் நோக்கம் கொண்டவர்களுக்கு அறிவூட்டும் வகையில் கருத்தரங்குகளை நடத்துவது ஆகியவை ஆகும்.

இவ்வாறான நோக்கங்கள் கொண்ட எமது இயகத்தின் பெயருக்கு "மாசு" ஏற்படுத்துவகையில் தமிழ்நாட்டிற்குச் சென்று அங்கு போலியான மற்றும் பொய்யான பரப்புரை செய்யும் "புல்லுருவிகளை" இனங்கண்டு ஒதுக்கும் வகையில் எமது எதிர்காலச் செயற்பாடுகள் தீவிரமானவையாக இருக்கும் என்ற செய்தியையும் நான் பகிர்ந்து கொண்டுள்ளேன்.



இவ்வாறு "உண்மையான"தும் கனடாவில் தலைமையகத்தை கொண்டதும். மேற்படி தலைமையகத்திற்கான உத்தியோகபூர்வமான பதிவு கனடாவின் மத்திய அரசின் கீழ் வரும் அமைச்சில் செய்யப்பட்டுள்ள நிலையில் எமது பயணம் இடைவிடாது தொடரும் என்ற நற்செய்தியையும் இத்தால் பகிர்ந்து கொள்கின்றேன்.

இங்ஙனம்
துரை கணேசலிங்கம்
செயலாளர் நாயகம், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்
தலைமையகம். 11-01-2024

# 3 ஜல்லிக்கட்டு போட்டிகளில் முதல்வர் ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி சார்பில் 6 கார்கள் பரிசு!

இந்திய செய்திகள்

அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் சிறந்த காளைகளுக்கு தலா ஒரு கார், சிறந்த வீரர்களுக்கு தலா ஒரு கார் என மொத்தம் 6 கார்கள் பரிசாக வழங்கப்பட உள்ளது என்று அமைச்சர் பி.மூர்த்தி கூறினார்.மதுரை மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஜல்லிக்கட்டுப் போட்டிகளின் முன்னேற்பாடு குறித்த கலந்தாய்வுக் கூட்டம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், ஆட்சியர் சங்கீதா முன்னிலையில் இன்று நடந்தது.

கூட்டத்துக்குப் பின் அமைச்சர் பி.மூர்த்தி கூறியதாவது: பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அரசு சார்பில் ஜனவரி 15ல் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு, 16ல் பாலமேடு ஜல்லிக்கட்டு, 17ல் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.இந்தப் போட்டிகளில் பங்கேற்கும் காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்களுக்கான ஆன்லைன் பதிவு புதன்கிழமை பிற்பகல் 12 மணிக்குத் தொடங்கி, வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு நிறைவு பெற்றது.தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து மொத்தம் 12,176 காளைகள், 4,514 மாடுபிடி வீரர்கள் விண்ணப்பித்துள்ளனர். மாவட்ட நிர்வாகத்தின் மூலம் விண்ணப்பங்களை ஆய்வு செய்யும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இரட்டைப் பதிவு, சரியான ஆவணங்கள் இல்லையெனில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதல்வர் மு.க.ஸ்டாலின் சார்பில் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் தேர்வாகும் சிறந்த காளைக்கு தலா ஒரு கார், அமைச்சர் உதயநிதி சார்பில் சிறந்த மாடுபிடி வீரருக்கு தலா ஒரு கார் பரிசாக வழங்கப்படும். மூன்று ஜல்லிக்கட்டிலும் 6 கார்கள் வழங்கப்பட உள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.இந்தக் கூட்டத்தில் மாநகராட்சி ஆணையர்



லி.மதுபாலன், சோழவந்தான் எம்எல்ஏ ஆ.வெங்கடேசன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.புதிய அரங்கில் 5 நாட்கள் போட்டி: அலங்காநல்லூர் அருகே கீழக்கரையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மிரம்மாண்ட ஜல்லிக்கட்டு அரங்கம் இம்மாத இறுதிக்குள் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரடியாக வந்து திறந்துவைக்க உள்ளார்.

தொடக்க விழா நடைபெறும் நாள் முதல் தொடர்ந்து 5 நாட்கள் இந்த பிரம்மாண்ட அரங்கில் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் அரசு சார்பில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்போட்டிகளில் பங்கேற்க தமிழகம் முழுவதும் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள், ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள், ஒரு நாளாவது மதுரை ஜல்லிக்கட்டுப் போட்டியைப் பார்க்க வாய்ப்புக் கிடைக்கும். இதுபோல் ஆண்டுதோறும் இந்த அரங்கில் போட்டி நடத்தப்பட உள்ளது.

2,475 காளைகள் எண்ணிக்கை அதிகரிப்பு: 15ம் தேதி நடைபெறும் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டிக்கு 2,400 காளைகளும், 1318 மாடுபிடி வீரர்களும் ஆன்லைனில் முன்பதிவு செய்துள்ளனர். அதுபோல், 16ம் தேதி நடக்கும் பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டிக்கு 3,677 காளைகளும், 1,412 வீரர்களும் முன்பதிவு செய்துள்ளனர். 17ம் தேதி நடக்கும் உலக புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிக்கு 6,099 காளைகளும், 1784 வீரர்ளும் முன்பதிவு செய்துள்ளனர். ஒட்டுமொத்தமாக மூன்று போட்டிகளுக்கும் சேர்த்து 12,176 காகைளும், 4,514 வீரர்களும் போட்டியில் பங்கேற்க விண்ணப்பித்துள்ளனர்.கடந்த ஆண்டு 9, 701 காளைகளும், 5,399 வீரர்களும் முன்பதிவு செய்திருந்தனர். இந்த ஆண்டு, காளைகளை அடக்கும் வீரர்கள் எண்ணிக்கை முன்பதிவு குறைந்தாலும் 2,475 காளைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மதுரை மாவட்டத்தில் நடக்கும் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகளில் பங்கேற்க கடந்த ஆண்டைவிட அதிகளவு காளைகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக மூன்று போட்டிகளுக்கும் சேர்த்து 12,176 காகைளும், 4,514 வீரர்களும் போட்டியில் பங்கேற்க விண்ணப்பித்துள்ளனர்.

பொங்கல் விழா என்றாலே மதுரை மாவட்டத்தில் நடக்கும் ஜல்லிக்கட்டு போட்டிகள் ஒட்டுமொத்த தமிழகத்தின் கவனத்தையும் ஈர்க்கும். தமிழர்களுடைய வீரத்தையும், பண்பாடு, கலாச்சாரம் மற்றும் பராம்பரியத்தையும் இந்த விளையாட்டு பறைசாற்றும் என்பதால் இந்தப் போட்டியை தென் தமிழகத்தில் விமரிசையாக நடத்துவார்கள். இதில், மதுரை மாவட்டத்தில் தமிழக அரசு சார்பில் வரும் 15, 16 மற்றும் 17ம் தேதிகளில் நடத்தப்படும் அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் உலக புகழ்பெற்றவை.

# இறந்த மகளின் நினைவாக அரசுப் பள்ளிக்கு ரூ.4 கோடி மதிப்பிலான நிலத்தை வங்கி பெண் ஊழியர் தானமாக வழங்கினார்.



மதுரை மாவட்டம் மேலூர் அருகேயுள்ள கொடிக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர் ஆயி என்ற பூரணம். கனரா வங்கியில் வேலைபார்த்த இவரது கணவர்உக்கிரபாண்டியன், 30 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார்.

வாரிசு அடிப்படையில் கணவரின் வேலை ஆயி என்ற பூரணத்துக்கு கிடைத்தது. இவர் தற்போது மதுரை தல்லாகுளம் கனரா வங்கிக் கிளையில் ஊழியராகப் பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில், ஆயி என்ற பூரணத்தின் மகள் ஜனனி(30) இரண்டு ஆண்டுகளுக்கு முன் இறந்துவிட்டார். அவர் இறக்கும் தருவாயில் தனது தாயாரிடம், தனது தாத்தா வழங்கிய நிலத்தைசொந்த ஊரில் உள்ள பள்ளிக்கு தானமாக வழங்குமாறு கூறியுள்ளார்.

இதையடுத்து கொடிக்குளம் அரசு நடுநிலைப் பள்ளியை தரம் உயர்த்துவதற்காக, தனது பெயரில் இருந்த ரூ.4 கோடி மதிப்பிலான ஒன்றரை ஏக்கர் நிலத்தை அரசுக்கு தானமாக வழங்கினார். கடந்த 5ம் தேதி பள்ளியின் பெயரில் நிலத்தை பத்திரப் பதிவும் செய்து கொடுத்தார்.

பின்னர் மாவட்டக் கல்வி அலுவலர் சுப்பாராஜ், வட்டாரக்கல்வி அலுவலர் எஸ்தர் இந்துராணி, தலைமை ஆசிரியர் சம்பூரணம் ஆகியோர் முன்னிலையில், வங்கி ஊழியர் ஆயி என்ற பூரணம், முதன்மைக் கல்வி அலுவலர் கா.கார்த்திகாவிடம் நிலம் தானம் வழங்கியதற்கான ஆவணத்தை ஒப்படைத்தார். பெண் வங்கி ஊழியரின் இந்தச்செயலுக்கு அதிகாரிகள் அனைவரும் பாராட்டினர்.

இதுகுறித்து ஆயி என்ற பூரணம் கூறியதாவது: நான் பிறந்த ஊர் கொடிக்குளம். எனதுஅப்பா எனக்கு வழங்கிய ஒன்றரை ஏக்கர் நிலத்தை தானமாக வழங்கியுள்ளேன்.

பல்வேறு உதவிகள்... எனது மகள் ஜனனிக்கு ஒன்றரை வயது இருக்கும்போது எனது கணவர் விபத்தில் இறந்தார். நான் மகளை பி.காம். வரைபடிக்க வைத்து, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்துகொடுத்தேன். குடும்பப் பிரச்சினையால் மகள் இறந்துவிட்டார். எனது கணவர் இறந்தபோது எனது மகளுக்காகவே வாழ்ந்தேன். எனது மகள் இறந்த போது யாருக்காக வாழ்வது என நினைத்தேன்.

எனது மகள் சொன்னபடி ஒன்றரை ஏக்கர் நிலத்தை பள்ளிக்குத் தானமாக வழங்கியுள்ளேன். இதன் மூலம் எனது மகள்உயிருடன் வாழ்வதாக கருதுகிறேன். வெளியே தெரியாமல் பலருக்கும் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறேன். இவ்வாறு ஆயி என்ற பூரணம் கூறினார்.

# அதிமுக கொடியை ஓபிஎஸ் பயன்படுத்த தடை விதித்தது செல்லும்: சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

அதிமுக கொடி, சின்னம், லெட்டர் பேட் உள்ளிட்டவைகளை ஓ.பன்னீர்செல்வம் பயன்படுத்த தடை விதித்தது செல்லும் என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.கடந்த 2022 ஜூலை 11ம் தேதி நடந்த அதிமுக பொதுக்குழுவில் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட4 பேரை கட்சியில் இருந்து நீக்கியும், பழனிசாமியை இடைக்கால பொதுச் செயலாளராக தேர்வு செய்யும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதை எதிர்த்து ஓபிஎஸ் தொடர்ந்த வழக்கில், அவர் உட்பட 4 பேரை நீக்கி பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு தடை விதிக்க உயர் நீதிமன்றம் மறுப்பு தெரிவித்தது.

இந்த நிலையில், அதிமுகவின் பெயர், கொடி, சின்னம், லெட்டர்பேடு போன்றவற்றை ஓபிஎஸ் தரப்பினர் பயன்படுத்த தடை விதிக்க கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி மனு தாக்கல் செய்தார்.இந்த வழக்கை விசாரித்த நீதிபதி என்.சதீஷ்குமார் நேற்று பிறப்பித்த உத்தரவில், பொதுக்குழு தீர்மானங்கள் மற்றும்



பொதுச் செயலாளர் தேர்தலை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை எதுவும் விதிக்கவில்லை.

எனவே, அதிமுக பெயர், கொடி, சின்னம், லெட்டர்பேடு போன்றவற்றை, கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ள ஓபிஎஸ் மற்றும் அவரது தரப்பினர் பயன்படுத்த கூடாது என்று இடைக்கால தடை விதித்து, வழக்கை நவ.30க்கு தள்ளிவைத்து உத்தரவிட்டார்.இந்நிலையில், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆர்.மகாதேவன் மற்றும் முகமது ஷபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் ஓபிஎஸ் தரப்பில் ஒரு முறையீடு செய்யப்பட்டது. தனி நீதிபதி பிறப்பித்துள்ள உத்தரவை எதிர்த்து, மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணை முடிந்த நிலையில், இன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி, அதிமுக கொடி, சின்னம், லெட்டர் பேட் உள்ளிட்டவைகளை ஓ.பன்னீர்செல்வம் பயன்படுத்த விதிக்கப்பட்ட தடையை நீக்க மறுத்த நீதிபதிகள் ஆர்.மகாதேவன் மற்றும் முகமது ஷபீக் ஆகியோர், தடை விதித்தது செல்லும் என தீர்ப்பளித்தனர். மேலும் ஓபிஎஸ் தரப்பு மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர். அதேநேரம் வேண்டுமானால் ஓபிஎஸ் தரப்பு, தனி நீதிபதி முன் உரிய மனு தாக்கல் செய்யலாம் என்றும் நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்தனர்.

- நடராசா லோகதயாளன் -

## தமிழ் மக்களுக்கான தீர்வுகளை வழங்க இயலாத அரசதலைவர் தமிழர் பகுதிகளுக்கு எதற்கு விஜயம் செய்கிறார் – கேள்வி எழுப்புகிறார் ரவிகரன்

தமிழ் மக்களுக்கான தீர்வுகளை வழங்க இயலாத விக்கிரமசிங்க புகைப்படம் எடுப்பதற்காகத்தான் யாழிற்கும், வன்னிக்கும் வருகைதருகின்றாரா என முன்னாள் வடமாகாண-சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க தமிழர் பகுதிகளுக்கு வந்து சிரித்தபடி புகைப்படம் எடுபதை மாத்திரம் செய்யாமல், நாட்டின் பொறுப்புவாய்ந்த அரச தலைவராக தமிழ் மக்களுக்குரிய தீர்வுகளை வழங்க முன்வரவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தலைவி ஜெனிற்ரா கைதுசெய்யப்பட்டமையைக் கண்டித்து 08.01.2024 இன்று முல்லைத்தீவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப்பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## ஆளுமைக்கு ஆங்கிலமோ சட்டப்புலமையோ தேவையில்லை: சிறீதரன்

தலைவர் பிரபாகரன் ஆங்கில மொழியோ, சட்ட புலமையோ இல்லாமல் உலகத்திற்கு தமிழ் தேசியத்தை கொண்டு சென்று தமிழினத்தை அடையாளப்படுத்தினார் என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

மேலும், தலைவர்களுக்கு ஆங்கில மொழி புலமையும் சட்ட அறிவும் அவசியமென்றால் தந்தை செல்வா, ஜிஜி பொன்னம்பலம் காலத்தில் நாங்கள் விடுதலைபெற்றிருக்கவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தலைவர் பிரபாகரன் எவ்வாறு தன்னுடைய ஆங்கில மொழியோ சட்ட புலமையோ இல்லாமல் உலகத்திற்கு தமிழ் தேசியத்தை கொண்டு சென்று தமிழினத்தை அடையாளப்படுத்தினார்.

ஆனால் எத்தனையோ தலைவர்கள் தேடி வந்து பேசிய வரலாறை நாங்கள் திரும்பிப் பார்க்கின்றோம். ஆகவே அவற்றை நாங்கள் விமர்சிக்க தேவையில்லை.

அது மொழி என்பது ஒரு கொடை சட்டம் என்பது கிடைக்கின்ற கல்வி ரீதியான ஆற்றல் அவை இருக்கட்டும்.

ஆனால் தலைமைத்துவத்திற்கு அவர்களுடைய தைரியமும் மக்களை வழி நடத்துகின்ற பற்றும் இனம் மீதான சிந்தனையும் இருந்தால் அது ஒரு நல்ல தலைமைத்துவமாக வளரும்.

யாரையும் நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஐயாவும் தலைவராக வரக்கூடிய பூரண தகுதி கொண்டவர். என்னுடைய சக வேட்பாளர் சுமந்திரனும் தலைவராக வருவதற்குரிய பூரண தகுதியை கொண்டவர்.

ஆனால் இதை விட விண்ணப்பிக்காதவர்கள் வெளியிலே கட்சியை நடத்தக்கூடிய தலைவர்களும் இருக்கின்றார்கள் என்றார்.

## மண்டைதீவில் காவல் நிலையத்தின் மீது பெற்றோல் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம் மண்டைதீவு பொலிஸ் காவல் நிலையம் மீது பெற்றோல் குண்டு வீசியதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவுகின்றது.

மண்டைதீவில் சிலர் கடத்தல் முயற்சியில் ஈடுபடுவதாக தெரிவித்து பொலிசார் தேடுதலில் ஈடுபட்டிருந்த நிலையில் பொலிசாரைத் தாக்க முற்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் பொலிசாரின் காவல் நிலையத்தில் தங்கியிருந்த சமயம் இரு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மூன்று பெற்றோல் குண்டுகளை வீசியுள்ளனர். இதில் ஒரு பெற்றோல் குண்டை வீச முற்பட்டமோதும் பெற்றோல் போத்தல் வீதியில் வீழ்ந்து வெடித்துள்ளது. ஏனைய இரண்டும் பொலிஸ் காவல் நிலையம் உள்ளே வீழ்ந்து வெடித்துள்ளது.

இருந்தபோதும் பாரிய சேதங்கள் எவையும் ஏற்படவில்லை இதனையடுத்து அப்பகுதியில் மேலதிக பொலிசார் மற்றும் புலனாய்வாளர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.




## கனடாவில் தைப்பொங்கல்

--------------------------

கடுங்குளிர் கொண்ட கனடா நாட்டில்
காலை எட்டரைக்குக் கண்விழித்தே!
சுடுநீரில் சாம்பு தேய்த்து நீராடி
சூடான கோப்பியைச் சுவைத்தோம்
பச்சை மாவிலை பிளாஸ்டிக் தோரணம்
பவிசாக வாசலில் கட்டினோம்
பசும்பாற் பையை பிறிஜ்ஜில் எடுத்தே!
பத்திரமாய்ப் பானையில் விட்டோமே!

மின்சார அடுப்பில் மெதுவாய் வைத்தே!
மகிழ்வொடு பொங்கலைத் தொடங்கினோம்
அன்பொடு அகத்தாளும் நானும் சேர்ந்தே!
அருமையாய்ப் பொங்கல் செய்யவெண்ணி
வன்னி அரிசியென்று வடிவாய்ப் பொதிசெய்து
வரிசையாய் அடுக்கி இருந்ததில்
பொன்போல் பெற்று வந்த பச்சரிசியை
பயறுடன் பானையில் இட்டோமே!

தேங்காய்த் துருவலும் தித்திக்கும் சர்க்கரையும்
தேனும் திராட்சை வற்றலும்
பாங்காய்ப் பசுநெய் பதமாய் விட்டே!
பேரீச்சம் பழமும் சேர்த்தோம்
கற்கண்டும் முந்திரியும் கச்சிதமாய்க் கலந்தே!
காற்பலம் ஏலமும் இட்டோம்
பற்றொடு பொங்கிய சத்தான பொங்கலை
பக்குவமாய் இறக்கி வைத்தோமே!

பட்டாசு வெடியுமின்றி பக்திப் பாட்டுமின்றி
பகலவனின் பார்வை அற்று
முட்டான குளோசெற்றில் மூச்சடங்கி நிற்கும்
முதல்வனுக்குப் படைத்து வைத்தோம்
வட்டமாய்க் கூடியே வணக்கம் செலுத்தி
வரிசையாய் இருந்து உண்டோம்
இட்டமாய் இயன்றவரை இனத்தவர்க்கும்
கொடுத்தே!
இனிமையாய்த் திருநாளைக் களித்தோமே!

என்ன விலையைக் கொடுத்தே என்றாலும்
எம்மின வருங்காலச் சந்ததிக்கு
இன்பப் பொங்கல் விழாவின் இனிமையை
இளையோர்க்கு சொல்லி வைப்போம்
தொன்மைப் பரம்பரை விழுமியம் தொலைந்திடா
தன்மையாய்ச் சிறார்க்குச் சொல்லுவோம்
உன்னத நாளாம் உழவர் திருநாளை
உலகெலாம் அறியச் செய்வோமே!

--------------------------

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

உலக செய்திகள் World News

# இலங்கையுடனான சுவிட்சர்லாந்தின் ஒருங்கிணைந்த செயற்பாடுகள் குறித்து கேள்வி எழுப்பிய அந்நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள்



தமிழீழத்தில் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு, தொடர்ந்து கொண்டிருக்கும் கட்டமைப்புசார் தமிழின அழிப்பு நடவடிக்கைகள், சட்டத்திற்கு முரணான கைதுகள், துன்புறுத்தல்கள், கொலைகள், காணாமல் ஆக்கப்படுதல் என்பன இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் தமிழ் மக்களின் உரிமையும் நீதியும் தொடர்ச்சியாக மறுக்கப்படுகின்றன. இவ்வாறான சூழலில் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் தமிழர்கள் பன்னாட்டு நீதிகோரி தொடர்ச்சியாக போராடிவருகிறார்கள்.

இவைதொடர்பில் சுவிட்சர்லாந்து அரசு விரிவான முறையில் ஆராய்ந்து செயற்படாமல் இலங்கை அரசுடன் நெருக்கமான உறவைப் பேணிவருகிறது. சுவிஸ் அரசின் இந்த நிலைப்பாடானது சுவிஸ் வாழ் தமிழர்களுக்கு ஐயப்பாட்டையே தோற்றுவித்து வருகின்றது.

இவ்வாறான சூழமைவில் டிசம்பர் 21, 2023 அன்று MOLINA FABIAN தலைமையிலான ஐந்து சுவிஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து சுவிஸ் அரசாங்கத்திடம் ஏழு வெளிப்படையான கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

எழுப்பப்பட்ட கேள்விகள்:

1. நல்லிணக்கத்திற்கு அடிப்படையாக விளங்கும் போர்க்குற்றங்கள் மீதான நீதிவிசாரணையையும் அதன் தொடர்ச்சியான அரசியல் தீர்வையும் நடைமுறைப்படுத்த சுவிஸ் அரசாங்கம் எவ்வாறு ஆதரவு வழங்குகின்றது?
2. நீதி மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநாட்டத் தவறிய இலங்கை அரசினால் உருவாக்கப்பட்ட "உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை" பன்னாட்டு மனித உரிமை நிறுவனங்களும்,
3. ஐ.நா மனித உரிமை ஆணையாளரும் விமர்சித்திருக்கின்ற சூழலில் சுவிட்சர்லாந்து அரசாங்கம் எவ்வாறு ஆதரவளிக்கிறது?
4. புலம்பெயர் அமைப்பு மற்றும் பௌத்த பிக்குகள் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட "இமயமலைப் பிரகடனத்தை" பெரும் பகுதியான தமிழ் கட்சிகள், பாதிக்கப்பட்ட தரப்புகள், சமூக அமைப்புகள் மற்றும் பல புலம்பெயர் அமைப்புகள் போன்றவற்றால் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் சுவிட்சர்லாந்து எந்தவகையில் ஆதரிக்கிறது? இது குறித்து சுவிட்சர்லாந்தில் வாழும் தமிழ் சமூகத்திடம் எந்தவொரு கருத்தாய்வும் ஏன் மேற்கொள்ளப்படவில்லை?
5. சர்வதேச ரீதியில் கடுமையாக விமர்சிக்கப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்றதற்காக கைது செய்யப்பட்ட தமிழர்களுக்கு ஆதரவாக சுவிட்சர்லாந்து அரசு எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது?
6. இலங்கையில் கைதுசெய்யப்பட்ட நபர்கள் சித்திரவதைக்கு உற்படுத்தப்படுவதுடன் கொலை செய்யப்படுவதாகவும் தற்போதும் அறிக்கைகள் வெளிவந்த வண்ணமுள்ளன. இந் நிலையில் சுவிசில் இருந்து இலங்கைக்கு புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடுகடத்தப்படும் போது அவர்களின் பாதுகாப்பிற்கு சுவிட்சர்லாந்து எவ்வாறு உத்தரவாதம் அளிக்கிறது?
7. 2023 இல் இலங்கைக்கு எத்தனை பேர் நாடுகடத்தப்பட்டார்கள்?

இவர்களின் இக்கேள்விகளுக்கான பதில்களை விரைவில் சுவிஸ் அரசு வெளியிடவுள்ளது. இத்தருணத்தில் எம் இனம் சார்பில் கேள்விகள் எழுப்பிய மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய குறித்த பாராளுமன்ற உறுபினர்களுக்கு சுவிஸ் வாழ் தமிழர்கள் சார்பாகவும் உலகத் தமிழர்கள் சார்பாகவும் உலகத் தமிழர் இயக்கமாகிய நாங்கள் இம் முயற்சியை வரவேற்பதுடன் உளப்பூர்வமான நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தொடர்பான அனைத்து விடையங்களிலும் நிலையான மற்றும் பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு உலகத் தமிழர் இயக்கம் உறுதுணையாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்வதுடன் இவர்களுடனான நேரடியான தொடர்பாடல்களைப் பேணுவதனூடாக தமிழர் இனப் பிரச்சனை தீர்வு தொடர்பாக தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ள சுவிஸ் அரசை வலியுறுத்தும் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்கவுள்ளோம் என்பதையும் குறிப்பிடுகின்றோம்.

சினிமா

# தொழிலதிபருடன் திருமணமா..? அதிர்ச்சியான அஞ்சலி

தமிழில் 2007-ல் வெளியான கற்றது தமிழ் படத்தில் அறிமுகமான அஞ்சலி, தொடர்ந்து பல படங்களில் நடித்து முன்னணி கதாநாயகியாக உயர்ந்தார். தமிழ் மட்டுமல்லாது தெலுங்கிலும் அதிக படங்களில் நடித்திருக்கிறார். சில வருடங்களுக்கு முன்பு இவரின் உடல் எடை அதிகமானதால் படங்கள் குறைந்தன. இதையடுத்து சினிமாவை விட்டு விலகிய அஞ்சலி உடல் எடையை குறைத்து மீண்டும் சினிமாவில் நுழைந்தார். நடிகை அஞ்சலியும் ஜெய்யும் காதலித்து வந்ததாகவும் இருவரும் திருமணம் செய்து கொள்ளவுள்ளதாகவும் தகவல் உலா வந்து கொண்டிருந்த நிலையில் திடீரென இருவரும் பிரேக் அப் செய்ததாக செய்திகள் வெளியானது.


தற்போது சினிமாவில் பிசியான நடிகையாக வலம் வரும் அஞ்சலி, "கேம் சேஞ்சர்", "ஏழு கடல் ஏழு மலை" போன்ற படங்களில் நடித்து வருகிறார். இந்நிலையில், நடிகை அஞ்சலி தன்னை பற்றி பரவி வரும் திருமண வதந்திகள் குறித்து நேர்காணல் ஒன்றில் கருத்து தெரிவித்துள்ளார். அதில், "சினிமாவில் எனக்கு நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள். என்னைப்பற்றி என்ன எழுத வேண்டும், யாருடன் இணைத்து எழுத வேண்டும் என்று அவர்களே முடிவு செய்து எழுதுகிறார்கள். முதலில் நடிகர் ஜெய்யை காதலித்ததாக செய்தி வந்தது. பின்னர் தொழிலதிபரை திருமணம் செய்துகொண்டு அமெரிக்காவில் செட்டில் ஆனதாக சொல்லப்பட்டது. எனக்கே தெரியாமல் எனக்கு திருமணம் ஆனதை நினைத்து நான் சிரித்தேன்" என்று கூறியுள்ளார்.







மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1082

## ஆலடி விநாயகர் ஆலயம் திருகோணமலை

*" ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை*
*புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே. "*

திருகோணமலை ஐயனார்கேணியில் அமைந்துள்ள ஆலடி விநாயகர் ஆலயம் ஏறக்குறைய நூறுவருடங்களுக்கு முன், போக்குவரத்துக்குரிய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகக் விளங்கியது. தற்காலத்தில் மாத்தளை என அழைக்கப்படும் பன்னகாமத்திலிருந்து கூடாரவண்டிகளில் வியாபாரப் பொருட்களை ஏற்றிவந்து திருகோணமலையில் வியாபாரம் செய்வது வழக்கம். இவ்வாறு வியாரம் செய்யவரும் வியாபாரிகள் மாட்டுவண்டிகளோடு திருகோணமலை ஐயனார் கேணியில் தங்கி முகாமிட்டு, ஓரிருநாட்கள் தங்கித் தமது பிரயாணத்தைத் தொடர்ந்துள்ளார்கள். இவ்விடத்திலே ஒரு கேணியும், கேணியடியில் பிள்ளையாரும் காணப்பட்டுள்ளது.

இவ்விடத்தைக் கடந்து செல்லும் உள்ளூர் வியாபாரிகளோடு வெளியூர் வியா-பாரிகளும் கேணியடிப்பிள்ளையாரை பக்திசிரத்தையோடு வணங்கி வழிபட்டு பூசை செய்த பின்பே தமது பிரயாணத்தைத் தொடர்வர். பின்னாளில் வியாபாரிகள் தங்குமிடமாகப் பயன்பட்ட இவ்விடம் மக்கள் குடியிருப்புப் பிரதேசமாக மாற்றமடைந்தது. இக்காரணத்தினால் சுமார் எண்பது வருடங்களுக்கு முன் ஐயனார்கேணிப் பிள்ளையாரை எடுத்துவந்து திருகோண-மலை பத்திரகாளிகோவிலுக்கு அருகேயிருந்த ஆலமரத்தடியில் குடிசைக்கோவில் ஒன்றினை அமைத்து அவ்விடத்திலே எழுந்தருளச் செய்து பக்தர்கள் வழிபாடியற்றி வந்தனர். ஆலமரத்தடியில் வைத்து வழிபட்டு வந்த காரணத்தால் ஆலடிவிநாயகர் என்ற பெயர் ஏற்பட்டது.

இவ்வாறு அமைக்கப்பட்ட இடத்திலே திரு சின்னையாக் குருக்கள் என்பவர் பூசைகளை நடத்தி வந்துள்ளார். இவரின் பின் வேதாரிணியத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வேதநாயகக் குருக்கள் என்பவரது மகனான திரு. வே. சுப்பையாக் குருக்கள் என்பவர் 1905 ஆம் ஆண்டளவில் பூசைவழிபாடுகளைத் தொடர்ந்து நடத்தியுள்ளார். இவரது அயராத முயற்சியின் காரணமாக குடிசைக்கோவிலாக இருந்த ஆலடி விநாயகர் ஆலயம் மடாலயமாக மாற்றம்பெற்றது. மாற்றம்பெற்ற மடாலயத்திலே விநாயகரை எழுந்தருளச் செய்து பூசைவழிபாடுகளைச் சிறப்பாகத் தொடர்ந்து நடத்திவந்துள்ளார்.

இக்காலப்பகுதியில் ஆலடிப்பிள்ளையாரின் சிறப்பையும், அருளையும் கேள்விப்பட்ட மக்கள் இவ்வாலயத்திற்கு வருகைத்தரத்தொடங்கினர். இதன் காரணமாக இவ்வாலயத்திலே பல மாற்றங்கள் ஏற்பட்டது. இதனைத்தொடர்ந்து ஆலடிவிநாயகரின் அருளைப்பெற்ற அன்பர்கள் இவ்வாலய வளர்ச்சியில் அக்கறைகொண்டு மகாமண்டபம், தரிசன மண்டபம் ஆகியவற்றைக் கட்டிக்கொடுத்தனர். இதன்தொடர்ச்சியாக 1924 ஆம் ஆண்டு இவ்வாலயத்திலே எழுந்தருளி விநாயகரை எழுந்தருளச் செய்தனர். இக்காலம்முதல் இவ்வாலயத்திலே அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. மேலும் பலவிதமான பணிகள் நிறைவேற்றப்பட்டு 1945 ஆம் ஆண்டு சம்புரோட்சண கும்பாபிஷேகம் முதன்முதலாக நிறைவேற்றப்பட்டது.

கும்பாபிஷேகப்பணிகளைத் தொடர்ந்து 1959 ஆம் ஆண்டு திருகோணமலை யிலுள்ள அன்பர்களினால் இவ்வாலயத்திற்கு முன்மண்டபமும் சிறிய கோபுரமும் அமைக்கப்பட்டு இவ்வாலயம் புதுப்பொலிவுடன் திகழ ஆரம்பித்தது. மடாலயமாகவிருந்து வளர்ச்சிபெற்ற இவ்வாலயத்தின் கருவறையை திருகோணமலைவாழ் மக்கள் ஒன்றிணைந்து 1970 ஆம் ஆண்டில் புனருத்தாரணம் செய்து, தூபிஅமைத்து கருவறையிலே புதியவிநாயகரை நிறுவினர். இப்புனருத்தாரணப் பணிகளைத்தொடர்ந்து 1972 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வாறான பல பணிகள் காலக்கிரமத்தில் நிறைவேற்றப்பட்டமையால் இவ்வாலயம் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம், அழகிய கோபுரம் ஆகியவற்றைக் கொண்ட திருக்கோவிலாகக் காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் கருவறை அழகிய சுதைச் சிற்பவேலைகளையுடைய தூபியைக்கொண்டதாக விளங்குகின்றது.

இவ்வாலயத்தின் கருவறையில் எழுந்தருளியுள்ள சதுர்புஜ விநாயகப்பெருமான், அபயம், வரதம், அங்குசம், பரசம் ஆகியவற்றைத் தாங்கிய திருக்கரங்களையுடையவராக ஆசனத்தில் இருந்தபாவனையில் காணப்படுகின்றார். இவ்வாலயத்திலுள்ள மகாமண்டபமே வசந்தமண்டபமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் வடக்குப் பக்கமாக அமைக்கப்பட்டுள்ள பீடத்தில் பஞ்சலோகத்தினாலாகிய விநாயகப்பெருமான், பஞ்சமுகவிநாயகர், மகாவிஷ்ணு, சுப்ரமணியர் ஆகிய மூர்திகள் எழுந்தருளியுள்ளனர். இம்மூர்த்திகளுக்கு நித்தியதீபம் ஏற்றிநிலையில் இரண்டு பாவைவிளக்குகள் வசந்தமண்டபத்தில் அமைந்துள்ளது.

ஆரம்பகாலத்திலிருந்த ஐயனார்கேணி விநாயகர் சிலை மற்றும் சிவலிங்கப்பெருமானுடைய திருவுருவம் ஆகியனவும் இம்மண்டபத்திலே வைத்து வணங்கப்படுகின்றது. தரிசனமண்டபத்தில் மூஷிகமும், பலிபீடமும் அமைந்து காணப்படுகின்றது. இம்மண்டபத்தின் சுவர்களில் புராணவரலாறுகளை எடுத்தியம்பும் அழகிய சுவரோவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இச்சித்திரங்கள் விநாயரோடு தொடர்புடைய புராணக்கதைகளைக் கொண்டு காணப்படுகின்றன.

**- வளரும்**




OM NAMO NARAYANA



**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**Now In: 16 TREELINE COURT MARKHAM**
**L3S 3T8 CANADA**
**001 416 904 6278**

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது
குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

**12-01-2024 வெள்ளி தொடக்கம் 18-01-2024 வியாழன் வரையும்**




**மேஷம்:** புதிய வாய்ப்புக்கள் வரும். பொல்லாத காரியங்கள் சொல்லாமல் விலகும். புத்தி சாதுர்யம் கூடும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். புதிய வாகனம் சேரும். தீய எண்ணம் விலகும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். திடீர் தனவரவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். செயல் திறமை அதிகரிக்கும். கடன்சுமை அதிகரிக்கும். கடின உழைப்பு தேவைப்படும். கால்நடைகளால் லாபம் தரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். விருந்தினர் வருகை உண்டு. வீண் செலவுகள் குறையும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். அரசியலில் புகழ் சேரும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்கும் யோகம் உண்டு. கல்விக்கடன் ஏற்படும். குடும்ப மன நிறைவு தரும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். நிர்வாகத் திறன் கூடும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நல்லோர்கள் நட்பு ஏற்படும். பணவிரயம் ஏற்படும். சொத்துக்கள் சேரும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். வாழ்க்கை வசதி பெருகும். வாழ்வு நிலை உயரும். மனவேதனை குறையும். கல்வியில் கவனம் குறையும். போட்டிகள் மறையும். லாபம் திருப்தி தரும். மன அமைதி கூடும். மற்றவர் தொல்லை நீங்கும். குடும்ப ஒற்றுமை ஓங்கும். வெற்றி நிலை தொடரும். இடமாற்றம் நன்மை தரும். பதவியில் உயர்வு வரும். நண்பரால் சங்கடம் நேரிடும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 2,1,5,9
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,P




**ரிஷபம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். நண்பரால் சங்கடம் நேரும். நடவடிக்கையில் மாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பாராத லாபம் சேரும். பெற்றோர்களால் பாராட்டப் பெறுவீர்கள். செயல் விவேகம் கூடும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை வெளிப்படும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். மனை வாங்கும் சிந்தனை உண்டு. மனைவியால் ஆறுதல் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். தொலைத்தூர பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபார மந்தநிலை அகலும். கடன் உதவி கிட்டும். அதிகாரியின் ஆதரவு பெருகும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். ஆன்றோர் வாழ்த்து கிட்டும். வியாபார வளர்ச்சி உண்டு. கொடுக்கல், வாங்கலால் நன்மை சேரும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கிய அபிவிருத்தி ஏற்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் வெளிப்படும். பெருமைகள் கூடி வரும். வாய்ப்பேச்சில் கவனம் தேவை. விசேஷ பலன்கள் உண்டு. வறுமை நிலை மாறும். வஸ்திர தான பிரார்த்தனையால் வளமும், நலமும், ஜெயமும் உண்டாகும். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். விவசாயம் விளைச்சல் தரும். கடன் பிரச்சனை தீரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X.K




**மிதுனம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கும் வாரம். காரிய அனுகூலம் தரும். பூர்வீகச் சொத்து வரும். புத்தாடை ஆபரணம் சேரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் வரும். மனதெளிவு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். மற்றவர் உதவி கிட்டும். உறவினர்கள் பாராட்டு கிட்டும். உத்தியோக உயர்வு கிட்டும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் உயர்வு கிட்டும். எதிர்பாராத ஏற்றம் கிட்டும். இனிப்பானச் செய்திகள் வரும். கோதுமை தானப் பிரார்த்தனையால் குலவிருத்தி சேரும். மனை வாங்கும் சிந்தனையும், மனதில் உள்ள காதலும் பூர்த்தியாகும். ஆடம்பர சுகங்கள் கூடும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மற்றவர்களால் மனஅமைதி கெடும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் தடை ஏற்படும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் ஏற்படும். வாழ்க்கை வசதி பெருகும். அரசாங்க அனுகூலம் கூடும். இளமையோடும் பெருமையோடும் காட்சியளிப்பீர்கள். பிள்ளைகள் வகையில் இருந்த தொல்லைகள் விலகும். தீர்த்த யாத்திரைகள் உண்டு. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நட்பால் பணவிரயம் உண்டு. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். காரியத்தடை அகலும். நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். புத்திரரால் பூரிப்பு உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சியுண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திரபகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,9
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,A




**கடகம்:** வீரியத்தோடு செயல்படும் வாரம். இரும்புத்தொழில் லாபம் உண்டு. சங்கடங்கள் அதிகமாகும். அரசியலில் ஆதாயம் உண்டு. வேலைப்பளு கூடும். அரிசி தானப் பிரார்த்தனையால் ஆயுள் விருத்தி உண்டாகும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வியாபாரத்தில் வெகு லாபம் கிடைக்கும் காலம். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். மாணவர் பாராட்டு பெறுவர். அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். இனிக்கும் சம்பவம் அமையும். தொழில் நிம்மதி கொடுக்கும். சகோதரியால் லாபம் உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். விரக்தி நிலை மாறும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் வரும். எள் தானப் பிரார்த்தனையால் ஏற்றமும், மாற்றமும் உண்டாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். நண்பர்கள் கவனம் தேவை. முயற்சி பலன் தரும். பழிச்சொல் தேடி வரும். காரியம் இழுபறியாகும். சுபிட்ஷம் பெருகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. கால்நடைகளால் பலன் உண்டு. வருமானத் தடை உண்டு. பணியாட்களால் தொல்லை ஏற்படும். கல்வியில் மந்த நிலை காணப்படும். வீடு, மனை யோகம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். கடவுள் பிரார்த்தனை எதுவாக இருந்தாலும் கைமேல் பலன் கிடைக்கும். ஆரோக்யம் அதிகரிக்கும். ஆதாயம் மிகுதியாகும். கஷ்ட காலம் விலகும். சுபச்செய்திகள் வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,7,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,V



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377




**சிம்மம்:** உடல்நலம் ஷேமம் தரும் வாரம். பயணம் லாபம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில்போட்டி அதிகமாகும். புதிய கடன் உருவாகும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உடல்நலத்தில் கவனம் தேவை. வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புக்கள் அகலும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மனநிறைவு உண்டாகும். குடும்ப உறவு பலப்படும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான தருணம். பணவரவு திருப்தி தரும். பல் வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். அணிகலன் சேர்க்கையுண்டு. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வீண் விரயம் தவிர்க்கவும். காரியத்தில் வெற்றி கிடைக்கும். கனவுகளும், ஆசைகளும் நிறைவேறும். கௌரவம் அதிகரிக்கும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல் சோர்வு ஏற்படும். ஆடம்பரப் பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். நினைத்தது நிறைவேறும். மின்சாரத்தில் கவனம் தேவை. குடும்ப கௌரவம் உயரும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். கருத்து வேறுபாடுகள் அகலும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை தேவை. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பொறுமையைக் கையாள வேண்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 4,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,C




**கன்னி:** பணவரவு திருப்தி தரும் வாரம். சவாலான விஷயங்களை சமாளித்து சாதனை நிகழ்த்தும் காலம். பழையக் கடன் தீரும். அச்சத்தை தவிர்ப்பது நல்லது. வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. உறவினர்களால் அலைச்சல் உண்டு. மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து போகும். திடீத் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் தேவை. உடன்பிறப்பால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். பணப்பிரச்சனைத் தீரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும். பழைய பாக்கிகள் வசூலாகும். முற்போக்கு சிந்தனை வரும். சோம்பல் அதிகரிக்கும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. குளிர்பானத் தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். பங்குத்தொழில் பணம் தரும். பெத்தவங்க ஆசியும், மத்தவங்க வாழ்த்தும் கிடைக்கும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பிரபல்ய ஆசை ஏற்படும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. கண் நோய் வந்து போகும். கால்நடைகளால் லாபம் உண்டு. பரபரப்பு இல்லாமல் பணவரவு பெருகும் காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 6,9,1,4
அதிர்ஷ்ட நிறம்: ஊதாநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,U




**துலாம்:** சாதகமான சூழ்நிலை உருவாகும் வாரம். பொன் பொருள் சேர்க்கையுண்டு. மருத்துவச் செலவு உண்டு. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். நண்பர்களால் நன்மையுண்டு. பாதகமான சூழ்நிலைகள் காணப்படும். பணியாட்கள் ஆதரவு அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உதயமாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பயணம் அனுகூலம் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சினை தீரும். வியாபாரம் சிறக்கும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். கிருபைகளும், பெருமைகளும் கிடைக்கும். காரிய வெற்றி கிட்டும். துயரங்களையும், தோல்விகளையும் தாண்டி உயரங்களைத் தொடும் காலம். குடும்ப ஒற்றுமை கூடும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகரிக்கும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. புண்ணியம் சேரும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். தோற்றப் பொலிவு கூடும். பொறியியல் துறை லாபம் தரும். ஆடை, அணிகலன் சேரும். உடல்நலம் திருப்தி தரும். தொலைநோக்கு சிந்தனை உருவாகும். விலைமதிக்க முடியாத வெகுமானம் கிடைக்கும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,J




**விருச்சிகம்:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். புண்ணியம் சேரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர் மதிப்பு உயரும். வேண்டிய உதவி கிட்டும். வாகனயோகயம் அதிகரிக்கும். வகையான செல்வம் சேரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பணம் புரளும். பூமியால் நன்மை தரும். செலவுகள் தவிர்க்கவும். வேலைப்பளு அதிகரிக்கும். பொறாமைகள் விலகும். புதியப்பொருள் சேரும். வழக்குகள் திருப்பம் தரும். செல்வாக்கு அதிகமாகும். இடமாற்றம் நன்மை தரும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலம் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். அரசியலில் பொறுமை தேவை. வீண் வம்பு விலகும். பாதகமான சூழ்நிலை விலகும். வினோதமான எண்ணங்கள் விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. ஆசைப்பட்ட வாழ்க்கை அமையும். பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. தொழில் போட்டி அதிகமாகும். மருத்துவச் செலவு கூடும். பணவரவு திருப்தி தரும். முயற்சிகள் பலிதமாகும். சேமிக்கும் எண்ணம் மேலோங்கும். தனவரவு பெருகும். மேன்மைகள் அதிக அளவில் நடைபெறும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். வீண் வம்பு அகலும். வியாபாரத்தடை ஏற்படும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். உடல் உபாதை நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 3,1,9,6
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,P

(தொடர்ச்சி 26 பக்கம்)

# யாழ்ப்பாண நூல் நிலையத்திற்கு வருகை தந்த பிருத்தானிய இளவரசி



இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான இராஜ்ஜிய உறவுகளின் 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் அதனை சிறப்பிக்கும் வகையில் பிரித்தானிய அரச குடும்பத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய ரோயல் இளவரசி மற்றும் அட்மிரல் சேர் திமோதி லே-ாரன்ஸ் ஆகியோர் மூன்று நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கான விஜயம் மேற்கண்ட அதிதிகள் யாழ்ப்பாண நூலகத்தில் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.





## கடந்தவையும் கடப்பவையும் - (84)

செல்வச்சந்நிதியான் என்றாலே சின்னப்பிள்ளைகளாய் - அவன்
எல்லையில் கண்டவைதான் மனக் கண்முன்

எப்பவுமே வந்து போகும் - எங்களுக்கு
அப்பத்தான் அவருடன் அதிக பிணைப்பு

எண்பதிற்கு முன் எப்பவுமே அமைதி அங்கு
சின்னவராய் இருப்பவர் அம்மாவுடன் பின்னுக்கு

பெரியவருள் ஒருவர் பெற்றோல் ராங்கில் - இது
முதற்சவாரி முன்னுக்கு வந்து இடமெடுக்க - நிழல்

மரத்தடியில் இடம்பிடித்து இருக்கும் போது
அடுத்த சவாரியில் முன்னுக்கும் பின்னுக்கும் ஒவ்வொருவர்

ஒரு திருவிழாப் பார்ப்பதற்கு - அன்று
பொறுமையுடன் நான்குமுறை ஓடிய காலமது - இன்னும்

படிப்படியாய் ஆட்கள் அதிகரிக்க அப்போ
எடுத்ததுதான் ஈவை முப்பத்தொன்பது சைபர் இரண்டு

ஆகக்கூடியது ஐந்துபேர் போகலாம் - சிறுவர்
ஆருக்கும் தெரியாது அந்த விதி

பெரியவர் மடியில் இருந்துதான் சவாரி
திருவிழா ஆனதால் அனைவரும் வருவார்கள் - அன்று

வடக்கு வீதியில் நிறையவே வாகனம் - வரிசையாய்
விடப்படும் தரிப்பிடம் காட்டி - முன்னமே

மனனம் செய்வித்த வாகன இலக்கத்தை
எடுத்ததா ம்ளையெனப் பரீட்சித்துப் பார்த்தே

'நெரிசலுக்குள் தொலைந்துவிட்டால் நேராக வரவேணும்'
உரியமுறையில் உசார்ப்படுத்திக் கொண்டாலும்

பிடித்த கை சிறிதேனும் தளராது ஆளுக்கொருவர்
அழுத்தப் பிடித்து நடத்திச் செல்வார்கள்

ஆற்றங்கரை ஓரமல்ல அடுத்த பக்கம் - அன்று
ஆங்காங்கே மரங்கள் அங்கு - ஒரு

பூவரச மரத்தடியில் 'காலடி' ஒன்று - அது
வீரபாகுத் தேவரின் அடி என்பார் - 'இவர்

சூரனுக்குத் தூது சென்று திரும்புகையில் - அங்கு
வேலை வைத்து பூசை செய்தார்' என்பதாயும் கதையுண்டாம்.

காலடியைப் பார்த்து விட்டு அழைத்துச் செல்வார் மறுபடியும்,
வேலனது சந்நிதியில் காவடிகள் மிக அதிகம்

தோள்களிலே ஏற்றிவைத்துக் காட்டுவார்கள்
தேர் ஓடும் வீதியின் தெய்வீக அழகுதனை - பின்னாளில்

பிரச்சினைகள் அதிகரிக்க கருமுகில்கள் இருள்பரப்ப - படிப்படியாய்
கலகலப்பை இழந்தது கந்தனின் சந்நிதியும்

எண்பத்தி ஆறில் கண்டாமணிக் கோபுரமும்
குண்டுத் தாக்குதற்கு இலக்காக - சித்திரத்

தேர்கூட எரிந்து சாம்பலாக - அத்தோடு
பேர் இடைவெளி வந்தது கந்தனுக்கும் எங்களுக்கும்

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

# அன்பின் தொனி - 719

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை - Grace of God**

**ஞானமுள்ளவன் பெலமுள்ளவன்**

பொல்லாத மனுஷர்மேல் பொறாமைகொள்ளாதே; அவர்களோடே இருக்கவும் விரும்பாதே. அவர்கள் இருதயம் கொடுமையை யோசிக்கும், அவர்கள் உதடுகள் தீவினையைப் பேசும். வீடு ஞானத்தினாலே கட்டப்பட்டு, விவேகத்தினாலே நிலைநிறுத்தப்படும். அறிவினாலே அறைகளில் அருமையும் இனிமையுமான சகலவிதப் பொருள்களும் நிறைந்திருக்கும். ஞான முள்ளவன் பெலமுள்ளவன்; அறிவுள்ளவன் தன் வல்லமையை அதிகரிக்கப்பண்ணுகிறான். நல்யோசனைசெய்து யுத்தம்பண்ணு; ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும். மூடனுக்கு ஞானம் எட்டாத உயரமாயிருக்கும் அவன் நியாயஸ்தலத்தில் தன் வாயைத் திறவான்.

**தீயநோக்கம் பாவமாம்**

தீவினைசெய்ய உபாயஞ்செய்கிறவன் துஷ்டன் என்னப்படுவான். தீயநோக்கம் பாவமாம்; பரியாசக்காரன் மனுஷருக்கு அருவருப்பானவன். ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்துபோவா யானால், உன் பெலன் குறுகினது. மரணத்துக்கு ஒப்பிக்கப்பட்டவர்களையும், கொலையுண் ணப்போகிறவர்களையும் விடுவிக்கக்கூடுமானால் விடுவி. அதை அறியோம் என்பாயாகில், இருதயங்களைச் சோதிக்கிறவர் அறியாரோ? உன் ஆத்துமாவைக் காக்கிறவர் கவனியா ரோ? அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக்குத்தக்கதாகப் பலனளியாரோ? என் மகனே, தேனைச் சாப்பிடு, அது நல்லது; கூட்டிலிருந்து ஒழுகும் தேன் உன் வாய்க்கு இன்பமாயிரு க்கும். அப்படியே ஞானத்தை அறிந்துகொள்வது உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்; அதைப் பெற்றுக்கொண்டால், அது முடிவில் உதவும், உன் நம்பிக்கை வீண்போகாது.

**நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்**

துஷ்டனே, நீ நீதிமானுடைய வாசஸ்தலத்துக்கு விரோதமாய்ப் பதிவிராதே; அவன் தங்கும் இடத்தைப் பாழாக்கிப்போடாதே.; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்.. உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே; அவன் இடறும்போது உன் இருதயம் களிகூராதிருப் பதாக. கர்த்தர் அதைக் காண்பார், அது அவர் பார்வைக்குப் பொல்லாப்பாயிருக்கும்; அப்பொழுது அவனிடத்தினின்று அவர் தமது கோபத்தை நீக்கிவிடுவார். பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலாகாதே; துன்மார்க்கர்மேல் பொறாமை கொள்ளாதே. துன்மார்க்கனுக்கு நல் முடிவு இல்லை; துன்மார்க்கனுடைய விளக்கு அணைந்துபோம்.

**நீ கர்த்தருக்கும் ராஜாவுக்கும் பயந்து நட**

என் மகனே, நீ கர்த்தருக்கும் ராஜாவுக்கும் பயந்து நட; கலகக்காரரோடு கலவாதே. சடிதியில் அவர்களுடைய ஆபத்து எழும்பும்; அவர்கள் இருவரின் சங்காரத்தையும் அறிந்தவன் யார்? பின்னும் ஞானமுள்ளவர்களின் புத்திமதிகள் என்னவெனில்: நியாயத்திலே முகதாட்சிணி யம் நல்லதல்ல. துன்மார்க்கனைப் பார்த்து: நீதிமானாயிருக்கிறாய் என்று சொல்லுகிற வனை ஜனங்கள் சபிப்பார்கள், பிரஜைகள் அவனை வெறுப்பார்கள். அவனைக் கடிந்துகொள் ளுகிறவர்கள்மேல் பிரியமுண்டாகும், அவர்களுக்கு உத்தம ஆசீர்வாதம் கிடைக்கும். செம்மை யான மறுமொழி சொல்லுகிறவன் உதடுகளை முத்தமிடுகிறவனுக்குச் சமானம்.

**உன் உதடுகளினால் வஞ்சகம் பேசாதே**

வெளியில் உன் வேலையை எத்தனப்படுத்தி, வயலில் அதை ஒழுங்காக்கி, பின்பு உன் வீட்டை க் கட்டு. நியாயமின்றிப் பிறனுக்கு விரோதமாய்ச் சாட்சியாக ஏற்படாதே் உன் உதடுகளினா ல் வஞ்சகம் பேசாதே.அவன் எனக்குச் செய்தபிரகாரம் நானும் அவனுக்குச் செய்வேன், அவன் செய்கைக்குத்தக்கதாக நானும் அவனுக்குச் சரிக்கட்டுவேன் என்று நீ சொல்லாதே. சோம்பே றியின் வயலையும், மதியீனனுடைய திராட்சத்தோட்டத்தையும் கடந்துபோனேன். **தொடரும்...**


## இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா
## பெருமையுடன் வழங்கும் கனடா வாழ் இணுவில் பிள்ளைகளின் கலைச்சங்கமமாம்
# பொங்கல் விழா – 2024

காலம்: 21-01-2024 (ஞாயிற்றுக்கிழமை)
இடம்: கனடா கந்தசாமி கோவில் - விழாமண்டபம்
733 Birchmount Road, ஸ்காபுரோ
நேரம்: மாலை 5.30 மணி

சிறுவர் நிகழ்ச்சி இபரதநாட்டியம், பேச்சு, சங்கீதக்கச்சேரி, தாளவாத்தியக் கச்சேரி, திரையிசை நடனம், கரியோக்கிப்பாடல், நகைச்சுவைநிகழ்வு எனக் காதுக்கும் கண்ணுக்கும் விருந்தாகும்.

ஏராளமான நிகழ்வுகளை கனடா வாழ் இணுவில் பிள்ளைகள் வழங்கவிருக்கிறார்கள். மேற்படி நிகழ்விலே கலந்து சிறப்பிக்க விரும்பும் இணுவில் பிள்ளைகள் எம்முடன் தொடர்புகொள்ளுமாறு.
அன்போடு அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு:
சாந்தி.ச: (647) 200-2177
மு.கிருபாகரன்: (416) 430-0422
ப.கஜஜெயன்: (416) 732-5898
ஜயசாஜினி.ச: (647) 522-8821

# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** கலகலப்பான வாரம். வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினரால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். முயற்சிகள் வெற்றி தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றியை தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பண விரயம் உண்டு. சுபகாரியம் கைகூடும். வேலை பளு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். நிதி நிலைமை சீராகும். முயற்சிகள் வெற்றியைத் தரும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். சாதுர்யமான பேச்சுக்களால் சாதகமான சூழ்நிலைகளை சந்திப்பீர்கள். முத்தான வாய்ப்பு பெருகும். ஸ்திர சொத்து சேரும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். பணவரவு உண்டு. திருப்புமுனை ஏற்படும். வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். காதல் கசக்கும். விவசாயம் பலன் அளிக்கும். பாதகம் விலகும். பொன், பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டாகும். மங்களச் செய்தி வரும். குடும்ப வளர்ச்சி கூடும். பழையக் கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். கல்வியில் ஆர்வம் கூடும். கட்டிட தொழில் லாபம் தரும். பங்குத்தொழிலில் கவனம் தேவை. பதவி வாய்ப்பு வரும். பிள்ளைகளால் தொல்லைகள் உண்டு. வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகனச் செலவுகள் ஏற்படும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 9,5,4,7

அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**மகரம்:** நியாயமான ஆசைகள் நிறைவேறும் வாரம். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் லாபம் தரும். திடீர் திருப்பம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. தொழில் வாய்ப்பு கூடி வரும். பிரபல்ய ஆசை ஏற்படும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தகுதிகள் மிகுதியாகும். மனநிறைவுகள் உண்டாகும். குடும்ப உறவு பலப்படும். மிகையான நன்மைகள் கிட்டும். முறிந்து போன உறவுகள் மகிழ்ந்து வந்து இணையும் காலம். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மனைவியின் அன்பு அதிகரிக்கும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்யம் அதிகரிக்கும். கலகலப்பான செய்திகள் வரும். ஆபத்துக்கள் விலகக்கூடிய மகத்தான காலம். ஆலய தரிசனத்தால் ஆத்ம பலன் பெறக்கூடிய அற்புதமான காலம். நன்மைகள் நாடி வரும். வராத கடன் வந்து சேரும். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. திட்டம் வெற்றி பெறும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும். சட்டம் சாதகமாகும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். திருப்பு முனை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். சாதனையான எண்ணங்கள் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,9,4,3

அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K




**கும்பம்:** எதார்த்தமாக செயல்படும் வாரம். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். மேலான ஆசியும் மேதைகளின் நட்பும் கிடைக்கும். வீடு, மனை வாங்கும் யோகம் கிடைக்கும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். விளையாட்டுத் துறையில் லாபம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். வேலைப்பளு அதிகரிக்கும். ஐஸ்வர்யம் சேரக்கூடிய அற்புதமான காலம். ஆபரணப் பொருள்கள் சேரும். எண்ணிய காரியம் கைக்கூடும். தொழிலில் எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரும். பதவியில் உயர்வு வரும். வெற்றி நிலை தொடரும். ராகு காலப் பிரார்த்தனையால் "ராஜயோகம்" கிடைக்கும். நன்மதிப்பு உருவாகும். வாடும் நிலை விலகி வீடு நிலமும் வாங்கும் காலம். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மனிதரால் வசதி உண்டு. பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியலில் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்ப தொல்லைத் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்புக்கள் கூடி வரும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மை தரும். அளவான பேச்சு ஆறுதல் தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டுக் கிட்டும். மகிழ்ச்சியான செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவிஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 4,1,3,5

அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**மீனம்:** ஆதாயம் கிடைக்கும் வாரம். உற்சாகம் மேலோங்கும். வறுமை நிலை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வாய்பேச்சில் நிதானம் தேவை. நிர்வாக அலைச்சல் கூடும். வெளியூர் பயணம் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. வியாபார லாபம் உண்டு. விசேஷ பலன்கள் உண்டு. சொந்த தொழில் அமையும். தொலைத்தூர பயணம் லாபம் தரும். துன்பம் விலகும் காலம். மனைவி மக்களால் மகிழ்ச்சி ததும்பும். தீய எண்ணம் விலகும். அரசு பணியில் மாற்றம் வரும். நிதி நிலைமை சீராகும். மற்றோரின் வாழ்த்துக் கிடைக்கும். புத்தாடை ஆபரணம் சேரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். கடனால் பிரச்சனை வரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். மனதெளிவு கிட்டும். கலைத்தொழில் உயர்வு பெறும். வம்புதும்புகள் ஒழியும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். வெளியூர் பயணம் லாபம் தரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எதிலும் நிதானம் தேவை. புத்தாடை சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு. நிலையான சந்தோஷம் உண்டு. அரசு உதவிகள் கிடைக்கும். கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்களிடம் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். தொழில் சிக்கல் மறையும். நிம்மதி பெருகும். இனிய செய்தியால் மனம் மகிழும். இடமாற்றம் தடைப்படும். கமிஷன் தொழில் லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. எதிரிகள் பலம் குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1

அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P

# மறைந்த "கெப்டன்" விஜயகாந்த் அவர்களின் மறைவையொட்டிய நாடு கடந்த தமிழீழ அரசாங்க அஞ்சலியை நேரில் செலுத்திய கனடா வாழ் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள்



மறைந்த நடிகர் "கெப்டன்" விஜயகாந்த் அவர்களின் துணைவியார் பிரேமலதா அவர்களையும் விஜயகாந்த் அவர்களின் இரண்டு புதல்வர்களையும் நேரில் சந்தித்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சார்பான அஞ்சலியைச் செலுத்தினார் கனடா வாழ் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள். அவருடன் மலேசியா நாட்டின் மாகாணப் பாராளுமன்றத்தின் உறுப்பினர் குணசேகரன் அவர்களும் இணைந்து செய்தியாளர்களைச் சந்தித்தார்கள்.



# இலங்கையிலிருந்து எம். பி மனோ கணேசன், கனடாவிலிருந்து ஒன்றாரியோ எம்பிபி லோகன் கணபதி ஆகியோர் அயலக தமிழர் விழாவில் அதிதிகளாக தமிழக அரசின் அழைப்பில் சென்னை பயணம்



இலங்கையிலிருந்து எம்.பி மனோ கணேசன், கனடாவிலிருந்து ஒன்றாரியோ எம்பிபி லோகன் கணபதி ஆகியோர் அயலக தமிழர் விழாவில் அதிதிகளாக தமிழக அரசின் அழைப்பில் சென்னை பயணம்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையில், ஜனவரி 11, 12ம் திகதிகளில் சென்னையில் நடைபெறும் அயலக தமிழர் விழாவில், தமிழக அரசின் அழைப்பையேற்று கலந்துக்கொள்வதற்காக, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் சென்னைக்கு பயணித்துள்ளார். இதேவேளையில் கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் பாராளுமன்ற உறுப்பினரும் முக்கிய அமைச்சொன்றின் பாராளுமன்றச் செயலாளருமான லோகன் கணபதி அவர்களும் சிறப்பு அதிதியாக சென்னை சென்றுள்ளார்.



இவர் விமானநிலையத்திற்குச் செல்லுமுன்னர் கனடா உதயன் ஆசிரிய பீடத்தோடு தொடர்பு கொண்டு உரையாடுகையில் "எனது தமிழ் நாட்டுக்கான பயணத்தின்போது அங்குள்ள தமிழ் உணர்வாளர்களோடும் கலந்துரையாடல்களை நடத்தி ஆக்கபூர்வமான செய்திகளோடு திரும்புவேன்" என்று தெரிவித்துள்ளார்.

# ஈழத்து பிரதிநிதிகளிடம் பிரபாகரனை நினைவு கூர்ந்த பிரேமலதா



மறைந்த தே.மு.தி.க தலைவரும், தமிழ்த் திரை உலகின் முன்னணி நடிகருமான விஜயகாந்தின் வீட்டுக்குச் சென்ற ஈழத்து அரசியல்வாதிகளான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் மற்றும் சென்னையில் வசித்துவரும் ஈழத்தைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர் சண் மாஸ்டர் ஆகியோரிடம் தலைவர் பிரபாகரன் தொடர்பில் விஜயகாந்த் மனைவி பிரேமலதா கண்ணீர் மல்க நினைவுகளை பகிர்ந்து கொண்டார்.

சென்னை கோயம்பேட்டில் அமைந்துள்ள தே.மு.தி.க தலைமை அலுவலகத்திலே உள்ள மறைந்த விஜயகாந்த் அவர்களின் நினைவிடத்தில் காலை 11 மணிமளவில் ஈழத் தமிழர்களின் சார்பில் சிவாஜிலிங்கம் மற்றும் சண் மாஸ்டர் ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள் அங்கிருந்து சாலிகிராமத்தில் அமைந்துள்ள விஜயகாந்த் வீட்டுக்குச் சென்று அவரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

விஜயகாந்தின் மனைவியும் தே.மு.தி.க கட்சியின் பொதுச் செயலாளருமாகிய பிரேமலதா அவர்களுடைய இரண்டு புதல்வர்களுடன் ஈழத்தின் பிரமுகர்கள் இருவரும் தமது இரங்கல்களைப் பரிமாறிக்கொண்டதுடன் ஈழத் தமிழர்கள் சார்பில் தமது இரங்கலையும் தெரிவித்தனர்.

இதன் போது மறைந்த விஜயகாந்தின் மனைவி பிரேமலதா தலைவர் பிரபாகரன் மீது தனது கணவர் கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாகவே எங்கள் மகனுக்கு பிரபாகரன் எனப் பெயர் வைத்தார் எனக் கண்ணீர் மல்க உணர்ச்சிப்பெருக்கோடு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஈழத் தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுத்து தம்மைத் தாமே ஆளுகின்ற மக்களாக வாழ வேண்டும் என்பதில் தனது கணவர் உறுதியாக இருந்தார் எனக் கூறினார்.

இதன்போது விஜயகாந்தின் எண்ணம், நோக்கம், சிந்தனை ஆகியவற்றை நாங்கள் என்றும் மதிப்பதுடன் ஈழத் தமிழர்களின் நலனுக்காக அவர் விட்டுச் சென்ற பணியை நீங்கள் தொடர்ந்து செல்ல வேண்டும் என, சிவாஜிலிங்கம் சண் மாஸ்டர் உள்ளிட்ட பிரதிநிதிகள் அவரிடம் கேட்டுக்கொண்டனர்.

இச்சந்திப்புக்கான ஏற்பாடுகளை திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னோடிகளில் ஒருவரான காமாட்சி நாயுடு அவர்கள் மேற்கொண்டிருந்ததுடன் அவரும் விஜயகாந்த் அவர்களின் திருவுருவருவப்படத்திற்கு மலர் தனது அஞ்சலியை செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL / COMMERCIAL / INDUSTRIAL / VACANT LAND / CONSTRUCTION

**OUR SERVICES**

- *1st & 2nd Mortgages*
- *Purchase*
- *Refinance*
- *Renewal*
- *Switches*
- *Equity Line of Credit*
- *Pre-approvals*
- *Self-employed*
- *Multi-rental properties*
- *New immigrants*



**அன்பும் ஆனந்தமும் பொங்கிட....!**
**அறமும் வளமும் தழைத்திட...!**
**இல்லமும் உள்ளமும் பொங்க...!**

**இனிய தமிழர்**
**திருநாளாம்...!**
**பொங்கல்**
**நல்வாழ்த்துக்கள்**

***Reach us through***

1585 Markham Rd,
Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca



**NESAN**
*Subramaniam*
**416-908-5656**

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

Mortgage Alliance — RightBroker = RightMortgage — Brokerage #10330 / Licence # M15001465
Scotiabank
TD Canada Trust
National Bank
First National Financial LP
MCAP
Home Trust
Equitable Bank
RFA
radius financial
RMG mortgages










26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

உதயம் 1449 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday January 12, 2024


# இலங்கையிலிருந்து சென்ற ஐய்யப்ப பக்தர் விமானத்தில் மரணம்



சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன் னாட்டு விமான நிலையத்துக்கு இலங்கை தலைநகர் கொழும்பில் இருந்து சென்ற யாழ்பாணம் ஐயப்ப பக்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

தெல்லிபளையை சேர்ந்த ஐய்யப்ப பக்தரான மோகனதாஸ் (வயது 49) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

ஐய்யப்ப பக்த நண்பர்களுடன் சபரிமலைக்கு செல்ல 10ஆம் திகதி விமானத்தில் சென்னை சென்றபோது விமானம் நடுவானில் பறந்து சென்றபோது மோகனதாசுக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது. விமானத்தில் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் அவரது உடல் நிலை மோசமானதால் இதுபற்றி விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு அவசர கால மருத்துவ உதவிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

(உள்ளே செய்தி 9ம் பக்கத்தில்)

# உலகத் தமிழாராய்ச்சி மாநாடு படுகொலைகள் 50 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் அனுஸ்டிக்கப்பட்டது



உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையின் ஐம்பதாவது ஆவது ஆண்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமாக இன்று யாழில் அனு‘டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்றாகும். யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று காலையில் இவ் நினைவேந்தல் நடைபெற்றது.

(உள்ளே செய்தி 9ம் பக்கத்தில்)

# ஸ்காபுறோ Majestic City யில் நம் மொழியின் பயன்பாடு நீக்கப்படுமா? தமிழர் பல்பொருள் அங்காடி என்ற பெயர் நீடிக்குமா?




சில ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவின் ஸ்காபுறோ நகரில் மார்க்கம்-மெக்னிக்கல் சந்திப்புக்கு அருகில் பிரமாண்டமான முறையில் திறந்து வைக்கப்பெற்ற **Majestic City** என்னும் தமிழர் பல் பொருள் அங்காடி தமிழ் மக்களின் அடையாளமாகத் திகழத் தொடங்கியது. அதற்கு முக்கிய காரணங்களில் சிலவற்றை நாம் எடுத்துக்கொண்டால், அங்கு தமிழ் பேசும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களே தங்கள் வர்த்தகத்தை நடத்தத் தொடங்கினார்கள்.

மற்றைய காரணம். மேற்படி **Majestic City** என்னும் தமிழர் பல் பொருள் அங்காடியின் ஏகபோக உரிமையாளர் வேற்று இனத்தவராக இருந்தாலும். பலரது ஆலோசனையின் பேரில் அங்காடியின் உட்பக்கத்தில் அமைக்கப்பெற்ற நடைபாதைகளுக்கு எமது தாய்த் தமிழகத்தில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களின் பெயர்களே சூட்டப்படுவதற்கு பூரண சம்மதத்தை வழங்கியிருந்தார்.

(உள்ளே செய்தி 17ம் பக்கத்தில்)

# கனடாத் தமிழ் மரபியல் நடுவம் நடத்திய 2024 ஆண்டிற்குரிய தமிழர் மரபுரிமை மாதத்தின் தொடக்க விழா




கனடாவில் இயங்கிவரும் தமிழ்ச் சமூகம் மற்றும் மொழி சார்ந்த சேவைகளில் ஈடுபட்டு வரும் அமைப்புக்களின் சம்மேளனமாய் விளங்கும் கனடாத் தமிழ் மரபியல் நடுவம் நடத்திய 2024 ம் ஆண்டிற்குரிய தமிழர் மரபுரிமை மாதத்தின் தொடக்க விழா 08-01-2024 திங்கட்கிழமையன்று மாலை மார்க்கம் நகரில் அமைந்துள்ள சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. கனடா தமிழ்க் கல்லூரி மற்றும் அறிவகம் ஆகிய தமிழ் மொழி கற்பித்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புக்கள் இந்த கனடாத் தமிழ் மரபியல் நடுவத்தின் முக்கிய உறுப்புரிமை கொண்டவர்களாக உள்ளதால் நூற்றுக்கணக்கான தமிழாசிரியைகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நகரசபை உறுப்பினர்கள் கல்விச் சபை உறுப்பினர்கள் உட்பட பல பிரமுகர்கள் அங்கு அழைக்கப்பட்ட விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.


(உள்ளே செய்தி 17ம் பக்கத்தில்)

# மறைந்த நடிகர் விஜயகாந்த் மறைவையொட்டி கனடா வாழ் நிமால் விநாயகமூர்த்தி நடிகரின் இல்லத்தில் அஞ்சலி



மறைந்த நடிகர் “கெப்டன்“ விஜயகாந்த் அவர்களின் மறைவையொட்டிய நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சார்பான அஞ்சலியை சென்னையில் உள்ள நடிகரின் இல்லத்தில் நேரில் செலுத்திய கனடா வாழ் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள்

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ் நிலைநாட்டியுள்ள "சிறுகதைகள் வாசிப்புச் சாதனை"



கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவரும் பன்முகப் படைப்பாளியுமாகிய அகணி சுரேஷ் அவர்கள் அண்மையில் இணையவழி ஊடாக நிலைநாட்டியுள்ள சிறுகதைகள் வாசிப்பு சாதனையை உலகெங்கும் உள்ள கலை இலக்கிய நண்பர் பாராட்டியவண்ணம் உள்ளார்கள். திரு. அகணி சுரேஸ் அவர்கள் 06-01-24 காலை 09:55 மணிக்கு (இந்தியா நேரப்படி) தொடங்கி 08-01-24 அதிகாலை 02:55 மணிக்கு நிறைவு செய்துள்ளார்.

(உள்ளே செய்தி 17ம் பக்கத்தில்)